பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 11 வெள்ளிக்கிழமை (25.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 60

பொதுசன நூலகம் நாவாந்துறைப் படிப்பகம் மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி உறுதி

## எப்பாடுபட்டேனும் அதனைச் செய்ய திடசங்கற்பம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு,ஜனவரி 25

**அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரணவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கும் - அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தக் கோரும் - திட்ட யோசனையை எப்பாடுபட்டேனும் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி தயாராகவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்றுத் தெரிவித்தார்.**

பிரபாகரன் வன்முறை நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டு ஜனநாயகத்திற்குத் திரும்பினால் அவரையும் இத்தீர்வுத் திட்டத்திற்குள் உள்வாங்க அரசு தயார் என்றும் அமைச்சர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நீண்ட காலமாக தீர்க்கப்பட முடியாமல் நீடித்துக்கொண்டுவரும் தேசிய பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு இப்போதுதான் சரியான வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி தேசியபிரச்சினைக்கு மாகாணசபை முறைமை மூலம் தீர்வுகாண 20 வருடங்களுக்கு முன் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அந் நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரதும இணக்கமும் அப்போது பெறப்படவில்லை.



ஆனால், அது இப்போது மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் சாத்தியப்பட்டிருக்கின்றது. அரசமைப்பின 13ஆவது திருத்தச் சட்டத்தின்படி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு

(10ஆம் பக்கம் பார்க்க)

# நல்ல முதல் நடவடிக்கை; வரவேற்கின்றது இந்தியா!

கொழும்பு, ஜன. 25

- இலங்கையின் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ள இடைக்கால சிபார்சை, இந்தியா வரவேற்றிருக்கின்றது.

''ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூகத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுக்கட்டமைப்பை எட்டுவதற்கான நல்ல தோர் முதல் நடவடிக்கை இது'' - என்று இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவ்டேஜ் சர்ண தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# இணைத் தலைமைகள் வரவேற்பு என இலங்கை அரசுத் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கும் தற்போதைய யோசனைத் திட்டத்தை இணைத்தலைமை நாடுகள் வரவேற்றுள்ளன என்றும், இத்திட்டம் மூலம் இலங்கைப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்குமென்றும் அந்நாடுகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன என்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன நேற்றுத் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## உடலில் சூட்டுக் காயங்களுடன் இரு புதைகுழிகளுக்குள் இருந்து

# கெப்பிற்றிக்கொலாவைப் பகுதியில் 16 ஆண்களின் சடலங்கள் மீட்பு!

கொழும்பு,ஜனவரி 25

அநுராதபுரம் மாவட்டம், ஹொறவப்பொததானைக்கு அப்பால் கெப்பிற்றிக்கொலாவைப் பகுதியில் கைகள் கட்டப்பட்ட நிலையில் உடலில் சூட்டுக்காயங்களுடன் பதினாறு ஆண்களின் சடலங்கள் அருகருகே இரு புதைகுழிகளில் புதைக்கப்பட்ட நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

அப்பகுதியில் உள்ள கிரிகெட்டுவாவ என்ற இடத்தில் தமது கால் நடைகளைத் தேடிக் காட்டுப் பக்கமாகச் சென்ற கிராம வாசி ஒருவர் அப்பகுதியில் குப்பை மேடு ஒன்றை ஒட்டிய பகுதியில் நிலத்துக்கு மேல் மனிதக் கை ஒன்று புதைந்த நிலையில் தென்படுவதைக் கண்டு, அது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார் என்று கூறப்படுகின்றது.

அதையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த கெப்பிற்றிக்கொலாவைப் பொலிஸார்

(10ஆம் பக்கம் பார்க்க)

# திங்கட்கிழமை தொடக்கம் பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 25

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் திங்கடகிழமை - 28ஆம் திகதி - மீண்டும் ஆரம்பமாகும் என்று யாழ். நகரத் தளபதி பிரிகேடியா ஆர்.குலதுங்க அறிவித்துள்ளார்.

சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தற்போது நிறுத்தப்பட்டுள்ள பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 28ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. ஏற்கனவே

(10ஆம் பக்கம் பார்க்க)

# வெளியிடங்களுக்கான பயண அனுமதி மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும்

## அதனைப் புதுப்பிக்கவும் கணனி மூலம் வசதி

யாழ்ப்பாணம், ஜன. 25

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதியைப் பெறும் ஒருவர் அதனை மூன்று மாதத்துக்குள் எத்தனை முறை சென்று வருவதற்கும் பயன்படுத்த முடியும். மூன்று மாதங்கள் முடிந்த பின்னர் அதனை யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் புதுப்பித்துப் பயணத்தை மேற்கொள்ளலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் ஆர்.குலத்துங்க.

யாழ். சிங்கள மாகாவித்தியாலத்தில் நேற்று சிவில் சமூகத்துடன் இடம் பெற்ற (10ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் ஆர்.குலத்துங்க சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ.து)

### பழைய இரும்புக்கான கூறுவிலை கோரல்

பழைய இரும்பு வகை விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை விண்ணப்பங்கள் 2008.01.30ஆம் திகதிக்கு முன்னதாக 'பொது முகாமையாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துர்க்காபுரம்' என்னும் முகவரிக்கு பழைய இரும்புக்கான கூறு விலை விண்ணப்பம் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

* கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/= செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை பல நோ.கூ. சங்கம்

2008.01.24

---

உ

## வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 161 ஆவது ஆராதனை விழா - 2008

காலம்:
2008.01.27 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை

இடம்:
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

தலைவர்:
திரு.வே.தி. செல்வரத்தினம்
யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

அ.சுற்பரானந்தன்
செயலாளர்.

வே.தி.செல்வரத்தினம்
சபைத் தலைவர்.

வட இலங்கை ச்ங்கீத சபை,
யாழ்.வலயக் கல்வி அலுவலகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/551213)

---

## கண்ணீர் அஞ்சலி



யா/கச்சாய் அ.த.க. பாடசாலையின் நடன ஆசிரியர் செல்வி செ.கிரிலோஜினி அவர்களின் அன்புச் சகோதரன்

### செல்வராசா துளசிதாசன்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரி ஒன்றியம்,
யா/கச்சாய் அ.த.க. பாடசாலை,
கொடிகாமம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(70449)

---

## தவறிவிட்டது

உடுபுடவைகள், பெறுமதியான பொருள்கள் என்பனவற்றுடன் பச்சைநிறப் பொதி ஒன்று ஆலைக்கோட்டைக்கும் சித்தன் கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செலான் அன்ட் பிறாங், சென்.அன்ரனிஸ் ரேடர்ஸ், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தொலைபேசி இல. 0776313745.

## தவறிவிட்டது

செல்வி சுதர்சினி செபஸ்தியாம்பிள்ளை என்பவரின் தேசிய அடையாள அட்டை (898210774V) யாழ்.மாட்டீன் வீதிக்கும் கந்தர்மடம் பழம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலய அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். தொ.பே. 0212228762

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
சம்பியன் லேன் ஊடாக நந்தாவில் லேன்
தொடக்கத்தில் புதிதாக நவீன
வசதிகளுடன் அமைக்கப்பட்ட பரப்பு
2 ¾ கொண்ட புதிய (Two Story House)
மாடி வீடு விற்பனைக்குண்டு.

Dr. T.Kulasingam.
7/1, நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P.: 0779793310.

(70454)

---

## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணபிரான் நவமணி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கண்ணபிரான் நவமணி நேற்று (24.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கண்ணபிரானின் அன்பு மனைவியும், மணிவண்ணன் (வீரகேசரி - கொழும்பு), நிர்மலா (லண்டன்), கமலவண்ணன் (த.பினான்ஸ் கம்பனி, யாழ்.) ஆகியோரின் அன்புத் தாயும் ஸ்ரீகுமரனின் (லண்டன்)அன்பு மாமியும் சத்தியன், டலினா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2008) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப 3 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
இல.1, கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

(சி/551216)

---

## நன்றி கூறுகின்றோம்

எம் பெருமான் அருள்மிகு ஸ்ரீநரசிம்ம ஞானவைரவருக்கு திருமஞ்சம் அமைக்க எமக்குக் கிடைத்த பாக்கியத்தைச் செயல்வடிவமாக்கிய சிற்பக் கலைமாமணி ஸ்தபதி பரஞ்சோதி சதீஸ்வரன்(தனுஜா சிற்பாலயம், திருநெல்வேலி) அவர்களுக்கும் அவர்களது குழுவினருக்கும் திருமஞ்ச வெள்ளோட்ட மலரினை சிறந்த முறையில் தொகுத்துத் தந்த ஆசிரியர் வே. யுகபாலசிங்கம் [B.A.(Hons) PGD in Edu.M.A.(Phil.)] அவர்களுக்கும் மலர் சிறப்புற தமது அருளாசிகளையும், நல்வாழ்த்துக்களையும், கட்டுரைகளையும், ஆலய வரலாறுகளையும் தந்துதவிய மதிப்புக்குரிய பெரியோர்களுக்கும் திருமஞ்சம் உலா வந்த பாதைகளை சீராக்கித் தந்த எமது பகுதி இளைஞர்கள், இலங்கை மின்சார சபைப் பணியாளர்கள், ரெலிக்கொம் நிறுவனப் பணியாளர்கள், கேபிள் TV இணைப்பாளர் செல்வம் ஆகியோருக்கும் திருவிழா சிறப்புற எம்மோடு சகல வகையிலும் ஆதரவு வழங்கிய ஆலய பரிபாலன சபையினருக்கும் வெள்ளோட்ட விழாவில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமஞ்ச உபயகாரர்
க.சோதிலிங்கம் குடும்பத்தினர்,
பாண்டியன்தாழ்வு.

(70453)

---

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு நாளை (26.01.2008) சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

*கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்*

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை

---

## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
க.கமலவர்ணன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கண்ணபிரான் நவமணி

அவர்கள் காலமான செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

த பினான்ஸ் கம்பனி PLC சக ஊழியர்கள்
யாழ்ப்பாணம், சாவகச்சேரி,
நெல்லியடி கிளையினர்.

(சி/551217)

---

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஸ்ணபிள்ளை துரையம்மா



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை துரையம்மா நேற்று(24.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - செல்லாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் ராணி, பன்னீர்ச்செல்வம், திருச்செல்வம், அருட்செல்வம் ஆகியோரின் பாசமிகு தாயும் சொலமன், சந்திராதேவி, ராதிகா, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமியும் ஜோய்சன், றொபேட்சன், றொபின்சன், டிக்ஷன், சுவிகஸ்னா, துகியான்ஸ், சஸ்மினா, றொஷானி, டயானா, அருள் றொபின்சன், நிக்சன், சுலைக்சன், சயுசன், முகுந்தன், றெபேக்கா ஆகியோரின் பேர்த்தியும் யொசாயா, யோர்தான் ஆகியோரின் பூட்டியும் சுப்பிரமணியம், மகேஸ்வரன், செல்லையா, நடராசா, யோகராணி, இராசம்மா, அன்னலட்சுமி ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவாலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பண்ணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(70431)

---

UK Qualification
HND
Computing /
Software Engineering /
Business Information Technology
Duration: 2 Years (Full Time)

BTEC HND
edexcel INTERNATIONAL

புதிய பிரிவு ஆரம்பம்
28.01.2008 பகல் 10 மணி

Obtain a World Class
British Qualification

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

A/L 2007 ?
What Next?

A/L 2007 பரீட்சை பெறுபேறுகள் உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லையா? கவலையை விடுங்கள். உங்கள் கனவுகளை நனவாக்கித்தருகின்றோம். கணனி உலகில் எமது 12 வருட அனுபவம் உங்களுக்கு நிச்சயம் ஓர் சிறந்த எதிர் காலத்தை உருவாக்கித் தரும்.

சிறந்த எதிர் காலத்தை தேடிக்கொள்ள விரும்பும் மாணவர்களே இன்றே எமது அலுவலகத்திற்கு வாருங்கள் வளமான எதிர்காலத்தை நாம் உருவாக்கித்தருகின்றோம்.

A/L தகமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visa க்களைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர் சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL,UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்திபெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதி ஆண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர் கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.



BSc.( Hons ) in IT /
BEng. ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia Canada etc.



IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 ... 021 222 6933
Email:iiscc@slt... Web:iiscitycampus.net
"A" Rated centre for quality for the 2nd consecutive year from Edexcel International-UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை விமர்சிக்கும் தகுதி ஜே.வி.பிக்கு ஒருபோதும் கிடையாது

## பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் காட்டம்

கொழும்பு,ஜன.24

''புவியியல்'' முதல் வாழ்வியல், சமூக பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் அடங்கலாக கலை, கலாசார உறவுகளை இலங்கையுடன் கொண்டுள்ள இந்தியாவை விமர்சிக்கும் தகுதி நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான் போன்ற ஜே.வி.பிக்குக் கிடையாது. இந்த நாடு அழிந்து போக வேண்டும். இன முறுகல்களால் மக்கள் பலி கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில் அரசியல் கபட நாடகமாடும் ஜே.வி.பியினர் அழியும் காலம் வெகு விரைவில் இல்லை.

- இவ்வாறு கொழும்பு மாவட்ட மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதியமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிக் குழுவினரின் இடைக்காலத் தீர்வுத்திட்ட யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தின் மூலமாக நடைமுறைப்படுத்தப் படவிருக்கிறது என எழுந்த சர்ச்சை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

'இந்தியாவும், பிரிட்டனும் நமது நாட்டின் மீது கொண்டுள்ள அக்கறையை வக்கிரமாக நோக்கும் இனவாத சக்திகளின் செயல்பாடுகள் மக்களுக்கே சிரமங்களை ஏற்படுத்தும். இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே மனித தர்மத்தையும், நாட்டையும், ஜனநாயகத்தையும் நேசிக்கும் சகல இன மக்களின் எதிர்பார்ப்பாகும்.

குரோதச் சிந்தனையும், குறுக்கு வழிச் செயற்பாடுகளும் அரசியலில் நிலைத்து நிற்கப்போவதில்லை என்பதை ஜே.வி.பியினரும்,ஹெல உறுமயவினரும் உணர்ந்து நடப்பது நல்லது. அமைதிக்கு வழிகூறிய இந்தியாவையும், பிரிட்டனையும் விமர்சிக்கும் தகுதியற்றவர்களின் பேச்சுகளுக்கு எவரும் செவிசாய்க்கக்கூடாது. நம் நாட்டுக்கு கஷ்டங்கள், ஆபத்தான நிலை ஏற்பட்டால் அண்டை நாடான இந்தியாவே நமக்கு உதவி வந்துள்ளது என்ற வரலாறை மறந்துவிடக்கூடாது.

அதேபோல் தமிழ், சிங்கள மன்னராட்சியை நீக்கி இலங்கையை ஒன்றிணைத்து ஆட்சி செய்த பிரிட்டனுக்குத் தீர்வுக்கான ஆலோசனைகள் கூறும் தகுதியுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளாத இனவாதக் கும்பல்கள் குறித்து கவலை கொள்ளத் தேவையில்லை.

இந்த நாட்டில் நல்லாட்சி நடக்கக்கூடாது, அமைதி - சமாதானம் ஏற்படக்கூடாது, இனப்பிரச்சினை தீரக்கூடாது, யுத்த அழிவுகளும், இன மோதல்களும் இரத்த ஆறாகப் பெருகி ஓட வேண்டும் என்று நம்பிக்கை கொண்டுள்ள நரிக்குணம் படைத்தவர்களிடம் சிங்கள மக்கள் மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் மக்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நிதானமில்லாத பேச்சையும், நேர்மையில்லாத நடவடிக்கைகளையும் நம்புவதற்கு மக்கள் தயாரில்லை என்பதையும் தமது செல்வாக்கு சரிந்து வருவதையும் உணர்ந் துள்ள இனவாதிகளான ஜே.வி.பியும், மதவாதி க ளான ஹெல உறுமயக் கட்சியினரும் சமாதானத் திற்கு முட்டுக் கட்டை போட்டு வருகிறார்கள்.

தென்பகுதி குண்டு வெடிப்புகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து சகல இன மக்களையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது. அப்படியானால் இந்த இனவாதத் தூண்டுதலின் சூத்திரதாரிகள் யார்?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யுத்தம் பரிகாரமாகாது என்பதைத் தொடர்ந்தும் மலையக மக்கள் முன்னணி வலியுறுத்தி வருகிறது. அதிகாரப் பரவலாக்கலின் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று வல்லரசு நாடுகளும் சர்வதேசமும் கருதும் போது ஜே.வி.பியினின் எச்சரிப்பும், ஹெல உறுமயவினது கூக்குரலும் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அண்டை நாட்டையும், நம்மை ஆட்சிசெய்த பிரிட்டிஷ் நாட்டையும் விமர்சிக்கும் ஜே.வி.பியின் தலைவர் தஞ்சமடைந்து ஒளிந்து உயிர் வாழ இடம்கொடுத்த நாட்டை விமர்சிப்பது அவரது கையாலாகாத தனமான அரசி யல் வங்கரோத்துத் தனத்தையே காட்டுகிறது.

கடந்த கால வரலாற்றுத் தவறுகளை சிங்களக் கட்சிகளோ, ஆட்சியாளர்களோ மறுபடியும் விடக்கூடாது என்பது புத்தி ஜீவிகளின் எதிர்பார்ப்பு மட்டுமல்ல, அமைதியை நேசிக்கும் சமாதான விரும்பிகளான சகல இன மக்களினதும் எதிர்பார்ப்பும். - ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# புலிகளின் 9 சடலங்கள் ஒப்படைப்பு

கொழும்பு,ஜன.25

மன்னார் மாவட்டத்தில் கடந்த திங்களன்று பல இடங்களிலும் படையினரு ...ன் இடம்பெற்ற மோதல்களில்

உயிரிழந்தவர்கள் என்று கூறப்படும் - விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஒன்பது பேரின் சடலங்களை அரசுத் தரப்பு நேற்றுமுன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தது.

யுத்தமுனைப் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டவை என்று கூறப்படும் இந்த ஒன்பது பேரின் சடலங்களிலும் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. அவை முதலில் வவுனியா பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தன. அச்சமயம் அவற்றைப் பார்வையிட்ட வவுனியா நீதிவான், அச் சடலங்களை பிரேத பரிசோதனையின் பின்னர் செஞ்சிலுவைக் குழு ஊடாக உரிய தரப்பினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (சி)

# பிள்ளையான் குழு உட்பட ஐந்து கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு

கொழும்பு,ஜன.25

பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட 5 கட்சிகள் அரசியல் கட்சியாக தேர்தல திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

'இன்று அனைவரும் மக்கள் அனைவரும் மன்னர்கள்' என்ற அமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா) அமைப்பு, புதிய சிஹல உறுமய, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகியன பதிவு செய்யப்பட்ட ஏனைய கட்சிகளாகும். (!)

# புத்தள காட்டுப்பகுதிக் கொலை: புதிய கோணத்தில் விசாரணை

கொழும்பு,ஜன.25

மொனறாகலை மாவட்டம் புத்தள தம்பிட்டகந்த காட்டுப் பகுதியில் கடந்த வாரம் எரியுண்ட நிலையில் மீட்கப்பட்ட நான்கு சடலங்கள் தொடர்பான விசாரணைகளை புதிய கோணத்தில் பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

காஞ்சாப் பயிர்ச் செய்கையின் போது ஏற்பட்ட குழு மோதல்களில் இவர்கள் கொல்லப்பட்டனர் என்று கருதி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் மொனறாகலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுடன் இக் கொலைக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முடுக்கிவிட்டிருக்கின்றனர்.

மீட்கப்பட்ட சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும், இவர்கள் நால்வரும் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் எரியூட்டப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# படையினர் பெயரில் இப்படியும் மோசடி!

கொழும்பு,ஜன.25

ஊனமுற்ற படையினருக்கு உதவுமாறு கோரி பணம் திரட்டும் மோசடியில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று கூறப்படும் இருவரைக் கட்டுநாயக்கா பொலிஸார் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது.

கட்டுநாயக்கா பஸ் நிலையப் பகுதியில் பொதுமக்களிடம் பணம் கேட்டுக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி இராணுவத்தில் இணைந்து கடமையாற்றிய போது, சில குற்றச்சாட்டுகளுக்காக பதவி நீககம் செய்யப்பட்டவர் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது.

இவர்கள் இருவரும் தடுத்துவைக்கப் பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று கட்டுநாயக்கா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சி)

# இ.போ.ச. ஊழியருக்கு அடுத்த மாதம் சம்பள உயர்வு

கொழும்பு, ஜன.24

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு பெப்ரவரி தொடக்கம் அடிப் படைச் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் நிறுவனங்களின் சட்ட அடிப்படையிலேயே இந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப் பட்டு வந்தது. இதன் காரணமாக மிகக் குறைந்த சம்பளத்தையே ஊழியர்கள் பெற்று வந்தனர். இது தொடர்பாக ஊழியர்களிடம் கேட்டறிந்த அமைச்சர், இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

# முயற்சி திருவினையாக்கும்

விசுவாமித்திரர் சிறந்த முனிவர். மிக்க தவ வலிமையுடையவர். போராற்றல் படைத்தவர். இவர் ஒரு மஹா முனிவர். இவருக்கு உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. ரிஷிகளின் நிலைகளுள் 'பிரம்மரிஷி' என்னும் ஒரு நிலை மிக உயர்ந்ததாகும். கடுந் தவத்தாலும் ஐம்புலன்டக்கத்தாலும், ஞானத்தாலும் பெறவேண்டிய ஒரு பெரிய நிலை 'பிரம்மரிஷி' என்பது. அதை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்று முயற்சி செய்யத் தொடங்கினார். செயலும் அதன் பலனும் மிகப்பெரியது. அதையடைய முனிவர் பெரு முயற்சி செய்யலானார். இமய மலையின் கீழ்ப்பாகத்தையடைந்து உரிய முறைப்படி கடுந்தவம் மேற்கொண்டார். சிறிதும் அசையாமல், உணவும் நீரும் விடுத்து, இதற்கு இணையான தவம் இல்லை என்று சொல்லுமாறு தவம் செய்தார். எண்ணற்ற இடையூறுகள் வந்தன. மலை குலைந்தாலும் நிலைகுலையாத முனிவர் நெடுங்காலம் தவம் செய்தார். யாகத்தினை முடித்து உணவு தயாரித்து உண்ணத் தொடங்கினார். அச்சமயம் தேவேந்திரன் அந்தணர் வடிவில் வந்து தனக்குப் பசி என்று சொல்லி அவ்வுணவைப் பெற்றுச் சென்றுவிட்டார். தானம் வழங்கிய விசுவாமித்திரர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மீண்டும் மௌன விரதம் மேற்கொண்டு கடுந்தவம் புரிந்தார். நெடுங்காலம் சென்றது. முழுமூச்சுடன் தவமும் தொடர்ந்தது.

சுவாசத்தை அடக்கித் தவம் செய்தார். முடிவில் அவர் தலையிலிருந்து புகை எழுந்தது. அப்புகை மேலெழும்பி பெருநெருப்பாக மூவுலகங்களையும் பொசுக்க ஆரம்பித்தது. தேவர்களும் மற்றையோரும் ஒளி குன்றினர். வெப்பத்தால் வருந்தினர். துன்பம் தாளாது எல்லோரும் சென்று பிரம்ம தேவனிடம் முறையிட்டனர். பிரம்மன் காட்சி தந்தார். 'விசுவாமித்திர முனிவரே! உம் தவத்தை யாம் புகழ்கின்றோம். தங்கட்கு பிரம்மரிஷி என்னும் பட்டத்தை அளிக்கின்றோம் ஏற்றருள்க'' என்று அருள் புரிந்தார். முனிவர் தவம் நீக்கிப் பிரம்மனைக் கண்டு வணங்கினார். பல்வகை ஞானமும் ஆற்றலும் வேண்டுமென வரங்கேட்டுப் பெற்றார். மேலும் அவர் பிரம்மனைப் பார்த்து ''முனிவர்களுள் உயர்ந்த வசிஷ்ட முனிவரும் தன் வாக்கால் என்னைப் பிரம்மரிஷி என்றழைக்க வேண்டும்'' என்றார். தேவர்களின நலன்கருதி, வசிஷ்ட முனிவரும் தோன்றித் ''தாங்கள் பிரம்மரிஷியே. அதற்குரிய இலக்கணங்கள் எல்லாம் உம்மிடத்திலுள்ளன. தவம் விடுத்து எழுவீராக '' என்றார்.

ஞானக்கதிர்

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்றழைக்கப்பட்ட விசுவாமித்திரரின் பெரு முயற்சி போற்றத்தக்கதே. முயன்றால் மு... ாததுண்டோ? முயற்சி திருவினையாக்கும்.

*நன்றி:ஞானச்சுடர்.*



கரவெட்டிப் பிரதேச கலாசாரப் பிரிவின் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் அடிக்கல் நடுவதை முதலாவது படத்திலும் -

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் பயில்வதற்கு 2008 கல்வியாண்டுக்குத் தெரிவான 134 பேரின் பெயர் விவரங்கள் வெளியாகி உள்ளன.

அவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேற் கொள்ளப்பட்டு புதன்கிழமை கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிலுநர்களுக்கான கடிதங்களை இன்றும் நாளையும் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் 73 பேரின் பெயர் விவரம் வருமாறு:

கலை

வி.பி.மோகனராஜ் (நல்லூர் கிழக்கு), கே.சசிவதனி (மிருசுவில்), எஸ்.நிசாந் (ஆனைக்கோட்டை), என்.சிவா (ஆனைக் கோட்டை), சி.தயாளினி (குருநகர்), ரி.ஜீன் (திருநெல்வேலி), ஆர்.சுதன்ராஜ் (சண்டிலிப்பாய்), எஸ்.பவித்திரா (நல்லூர்), ஏ.ஐ.நிலுசா (உரும்பிராய்), எஸ்.ரஜீஸ் (சுன்னாகம்),

விஞ்ஞானம் (தமிழ்மொழி மூலம்)

எஸ்.சசிதரன்(பண்டத்தரிப்பு),எஸ்.டினோச் (கல்வியங்காடு), ரி.விஜிதா (யாழ்ப் பாணம்), எஸ்.சுவர்ணா (கோண்டாவில் வடக்கு), எஸ்.தியாகலிங்கம் (யாழ்ப்பாணம்), ஆர்.தாட்சாயினி (சுழிபுரம்), பி.சுரேந்தர் (வல்வெட்டித்துறை), எஸ்.வினோதன் (மானிப்பாய்), எஸ்.கௌரி (சுண்டுக்குளி), கே.கஜேந்தினி (அல்வாய்), எ.செந்தூரன் (கைதடி மத்தி), எஸ்.சிந்திகா (தும்பளை), வை.வசீகரன் (வேலணை வடக்கு), ரி.ஐங்கரன் (கரவெட்டி), கே.சிவராசா (எழுதுமட்டுவான்),

ஆரம்பக்கல்வி

பி.அமிர்தினி (வவுனியா), என்.திவ்யா (புத்தூர்), ஜீ.திருச்செல்வம் (சாவகச்சேரி), எம்.பாலதாஸ் (சாவகச்சேரி), கே.அகலியா (யாழ்ப்பாணம்), ஆர்.சிவாநந்தினி (கோப்பாய்), எஸ்.கோபிகா (மீசாலை), ஆர்.றஞ்சிதா (சாவகச்சேரி), என்.சர்மினி (வயாவிளான் ), எ.திசானி (ஏழாலை), ரி:ஸ்ரீறஜிதா (அளவெட்டி)

எ.காயத்திரி (காரைநகர்), ஜே.சி.அகஸ்ரினா (நெடுந்தீவு), எம்.ஜெகதாரணி (மயிலங்காடு), பி.சதீஸ் (மானிப்பாய்), ஜே.சகிதா (புத்தூர்),கே.மோகனரூபி (தெல்லிப்பளை), என்.சுந்தரேசன் (ஆனைக் கோட்டை),கே.அஜந்தன் (திருநெல்வேலி), ஜே.ரம்யா (அல்வாய்)

கணிதம் (தமிழ்மொழி)

பி.திருப்புகழூர் சிங்கம் (காரைநகர்), எம்.வல்லிபுரம் (வரணி), எஸ்.பஞ்சாட்சரன் (பண்டத்தரிப்பு), கே. விநாயகம்பிள்ளை (அச்சுவேலி), ஆர். ரேணுகா (நீர்வேலி), ஆர். கைலாசபிள்ளை (கொக்குவில் கிழக்கு), ஈ.அனுசாந்தி (ஏழாலை), ஜீ.சகிதானந்தம் (புலோலி, மேற்கு), வி.யேசுதாசன் (இளவாலை) வீ.சுப்பிரமணியம் (தெல்லிப்பழை).

நடனம்

ஜீ..கிருசாந்தி (மானிப்பாய்), ரி.சதா (இணுவில்), கே.தீர்சினி (யாழ்ப்பாணம்), ஏ.கந்தசாமி (கொடிகாமம்), ஆர்கேதுஷா (நல்லூர்), ரி.சாலினி (தெல்லிப்பழை), எஸ்.கிரிஷா (மீசா லை), கே.அழகுசுந்தரம் (ஏழாலை), ஜே.ஜீ. ஈ.நிலோஜினி (மனிப்பாய்வடக்கு).

நாடகமும் அரங்கியலும்

ரி.ஐங்கரதீபன் (குடத்தனை), எஸ். ஞான குமார் (சுழிபுரம்), ரி.மதீபன் (கோண்டாவில்), எஸ்.சங்கந்தன் (பருத்தித் துறை), எம்.தனுசாந் (சுன்னாகம்), ரீ.சியா மினி (பண்டத்தரிப்பு), எஸ். நிகாஷ் (பருத்தித் துறை),ஜே.பூர்மிலா (வவுனியா), கே.கீர்த்தனா (குடத் தனை),

(தொடரும்)

## இலட்சார்ச்சனை

சுழிபுரம்,ஜன.25

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஏகதின இலட்சார்ச்சனை நாளை சனிக்கிழமை காலை 6 மணி முதல் ஆரம்பமாகி மாலை வரை நடைபெறவுள்ளது. சிவப்பிரம்மஸ்ரீ சிவா நித்தியானந்த சிவாச்சாரியார் தலைமையில் 15 சிவாச்சாரியார்கள் அர்ச்சனை நிகழ்வை நடத்துவார்

நிறைவாக அம்பாள் அன்னப் பட்சியில் வீதியுலா வருதல் நடைபெறும். (28)

## செஞ்சிலுவைக் குழு கூரைவிரிப்புகள் உதவி

வலி.வடக்கு,ஜன.25

யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கூரைகளுக்கான கூரை விரிப்புகளை வழங்க செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நடவடிக்கை எடுத் துள்ளது.

ஓலைகளால் வேயப்பட்டு பாதிக்கப் பட்ட வீடுகளில் வசித்த குடும்பங்களுக்கே இந்த உதவிகளை செ.ச.குழு வழங்கவுள் ளது.

பயனாளிகளை பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு ரீதியாக கிராம அலுவலர்கள் மூலம் திரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (202-86)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், 26.01.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* ராஜீவ் - நவாலி றோட், ஆனைக்கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
* சிற்றி பாம் ரேடேர்ஸ் - கல்வியங்காடு.
* P.ரவி - சாவகச்சேரி.

(70443)

## அறிவித்தல்
## வண்ணார்பண்ணை - காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, ஓடை ஒழுங்கை ''கரட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயிலுக்கு'' சொந்தமாக இருக்கும் ஆதனங்களை அல்லது அவற்றின் பாகங்களை எவரும் வாங்கவோ அல்லது குத்தகைக்கு எடுக்கவோ அல்லது வேறு எவ்வகையிலாவது சட்ட விரோதமான முறையில் கைமாறுதல் செய்ய வேண்டாமெனவும் மற்றும் அவ்வாதனத்தினுள் நிரந்தரக்கட்டடம் அமைக்கவோ அல்லது மேலதிக குடிசைகள் அமைப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை மீறி நடப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம்.

ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை. (70456)

குறித்த ஆலய
முகாமையாளர்களும்
உரிமையாளர்களும்.

# IELTS



Imperative English course of study for job seekers, higher study-students, and also for migrants...

| | Weekdays | Weekends |
|---|---|---|
| Commencement | 28th Jan | 26th Jan |
| Time | 1.00pm | 11.00am |

IIS CITY CAMPUS
#200 Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iiscitycampus.net

## அகவை ஐம்பதின் வாழ்த்துக்களும் பாராட்டும்
25.01.2008



ஆரோக்கிய வாசவைத்தியசாலை,
மட்டுவில், சாவகச்சேரி.

சொல்வளம் மிக்க பேச்சால் சோர்விலா
துழைத்த பாங்கால் அல்லும் பகலும்
ஆண்டவன் அடியினை மறவா பண்பால்
நல்லறம் செய்து நாளும் நலிந்தோரை
காத்த தொண்டால் எல்லையில் புகழ்
சேர் குருவே நீடூழி வாழ்க வாழியவே''

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர்

அருட்தந்தை

**M.ஜெறோம் செல்வநாயகம்**

[B.A.(Cey.), B.Th (Rome), Dip. in Ed., M.A (Ed.,Mgt) (London)]

அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாளிலே உடல், உள நலம் பெற்று நீண்டகாலம் இறைபணி வாழ்வு சிறக்க வாழ்த்தி இறை ஆசி வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.திருமதி லியோன் புஸ்பராணி

மணிவிழா நாயகராம் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும்
வடமாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளரும் ஆகிய
உயர்திரு. வே.தி.செல்வரத்தினம் அவர்களை

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



*பல்லவி*

வாழிய நீடூழி வாழி மகிழ்சிறந்து
மணிவிழா நாயகராம் செல்வரத்தின செம்மல் (வாழிய நீடூழி)

*அநுபல்லவி*

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாள ராய்த் திகழ்ந்து
யாவுள கற்கைநெறி பற்பல புகுத்துநராய்
வாழ்வாம் சமுதாயம் வளமான வாழ்வுபெற
மகத்துவப் பணிகள்பல ஆற்றிடும் மாமகிப (வாழிய நீடூழி)

*சரணம்*

தேசிய மொழிகளிலே சர்வதேச மொழியினிலே
தேர்ச்சி மிகவான திறமிகு வித்தகரே,
நேசித்துமிக நின்று யாழ்.பல்கலையின்
நேர்த்திக்கு ஒருவழியில் உதவியோய் (வாழிய நீடூழி)

அசாராத ரணசூழல் நிலவுகின்ற பொழுதினிலும்
அகநகர் கொழும்பிலிருந்து கற்கை நெறிக்கான
உசாத்துணை முதற்கொண்டு உடனுக்குடன் தருவிக்கும்
ஒண்புக ழோயை உளநிறைவாய் வாழ்த்துகின்றோம் (வாழிய நீடூழி)

நிர்வாகப் பிரமாணம், நிதித்துறைசார் பிரமாணம்,
நிறையவே தேர்ச்சி பெற்ற நிகரில் புகழோயே,
சர்வ பொழுதினிலும் ஆத்மீக நன்னெறி சேர்
கற்குண மேலவரே, சௌபாக்கியம் மிகவாக (வழிய நீடூழி)

உடுப்பிட்டி (70451)

உடுப்பிட்டியூர்
உறவினர்கள்.

## புனித பத்திரிசியார் கல்லூரியின்
## அதிபர் தின வாழ்த்து

இன்று(25.01.2008) வெள்ளிக்கிழமை
அகவை ஐம்பது காணும் கல்லூரியின் புதிய அதிபர்

**அருட்பணி.ம.ஜெறோ செல்வநாயகம்**

அடிகளை வாழ்த்துகின்றோம்

அகவை ஐம்பதில் - புதிய
அதிபராய் பணியாற்றும் - எம்
அதிபர் தந்தைக்கு - எங்கள்
அன்பு நிறை வாழ்த்துக்கள்.



அன்புடன்
புனித ப[illegible] கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜன.25

வடககு, கிழக்கு நீர்பாசன விவசாயத் திட்டதின் கீழ் (நியாப் II ) யாழ். மாவட்டத்தில் கடந்த ஆணடு 5 பிரிவுகளாக அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொது நோக்கு மண்டபம், குளம்/ உவர்நீர்த் தடுப்பணை, கிராம வீதிகள், குடிதண்ணீர் கிணறு, வாழ்வாதாரத் திட்டம ஆகிய பிரிவுகளாகவே திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.செயலகத் தகவல்கள் மூலம் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 24 பொதுநோக்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மண்கும்பான் உவர்நீர்த் தடுப்பணை தவிர்நத ஏனைய திட்டமிடப்பட்ட குளங்களின் புனரமைப்புப் பணிகளில் 70 சதவீதமானவை பூர்த்தியடைந்துள்ளன.

14 கிரவல் வீதிகளும் 2 தார் வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. 49 கிரவல் வீதிகளும் 2 தார் வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நியாப் II திட்டத்தின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 24 கிராமங்களில் 754 பயனாளிகளுக்கு 21.6 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## தென்மராட்சி மாணவர்களுக்கு கணிதபாட மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜன.25

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் தரம்9, தரம் 11 மாணவர்களுக்கான கணிதபாட மதிப்பீடு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (202)

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குப் புதிய கட்டடம்

வலி.தென்மேற்கு, ஜன.25

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக நூலகத்தை விஸ்தரிப்பதற்காகப் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டின் உள்ளூராட்சி திணைக்கள பிரமாண அடிப்படையிலான மூலதன நிதிமூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 இலட்சம் ரூபா நிதியை கொண்டு இக்கட்டடம் நிறுவப்பட்டு வருவதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

# கிரகிப்புச் சக்தியை மேம்படுத்திக் கொள்ள மாணவர் அதிக நூல்களை வாசிக்க வேண்டும்

### வினாக்களை விளங்கிக் கொள்ளவும் உதவும் என்கிறார் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஜன.25

கலவித் திணைக்களம் தற்போது வெளியிடும் பரீட்சை வினாத்தாள்களில் பெரும்பாலான வினாக் கள் நீண்ட வசனங் களைக் கொண்டவையாக அமைந்துள்ளன. அவற்றை வாசித்துக் கிரகிப்பதில் மாணவர்கள் சிரமப்படுகின்றனர்.

எனவே கிரகிப்பு சக்தியை மேம்படுத்த மாணவர்கள் பெருமளவான நூல்களை வாசிக்க வேண்டும்.

பணடததிரிப்பு இந்துக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலக கட்டடததைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேற்கணடவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் பு.ஸ்ரீ விக்கினேஸ்வரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் :

நூலகத்திலுள்ள நூல்களை வாசித்துப் பயன்படுததுவதன் மூலம் கிரகிக்கும் தனமை மாணவர்களுக்கு ஏற்படும்.

இதேவேளை, மாணவர்கள் - பெற்றோர்கள் மத்தியிர் ஏற்படுகின்ற விழிப்புணர்வுதான் கலவியை மேம்படுத்த முடியும். மாணவர்களின் நலனில் பெற்றோர்களும் அதிக கவனமெடுத்து கல்வியை ஊககுவிக்க முன்வரவேண்டும்.

பாடசாலையிலுள்ள நூலகங்களை மாணவாகள் மட்டுமன்றி ஆசிரியர்களும் நனகு பயனபடுத்திக் கொள்ள வேண்டும். வாசிபபதனமூலம் மனிதன் பூரணத்துவமடைகின்றான் என்ற கோட்பாட்டிகிணங்க பல்வேறு வகைப்பட்ட நூல்களையும் வாசிதது தமது பொது அறிவை விருததி செயது கொள்ள அனைவரும் முனவர வேணடியது அவசியம் - என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி உரையாற்று கையில் :



இந்த நூலகத்திற்கு நலன் விரும்பிகளும் பெற்றோர்களும் நூல்களை அன்பளிப்புச் செய்ய முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகும். யுத்த கால அனர்த்தங்களின் போது பலத்த அழிவு களுக்குள்ளான இக் கல்லூரியில் தற்போது கட்டடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் ஆசிரியர் பற்றாக்குறையும் நீக்கப்பட்டுள்ளது. புதிய நூலகத்தை நன்கு பயன்படுத்தி கல்வியில் முன்னேற்றம் காண முற்பட வேண்டும் - என்றார். (202-135)

## பயிர்களை நாசம் செய்த பன்றிகளில் ஒன்று பிடிபட்டது

வலி.தென்மேற்கு, ஜன.25

பண்டத்தரிப்பு - பெரியவிளான் பகுதி வயல் காணிகளில் புகுந்து பயிர்களை துவம்சம் செய்து வந்த பன்றிகளில் ஒன்றை விவசாயிகள் தடம்போட்டுப் பிடித்தனர்.

அண்மைக் காலமாகப் பன்றிகள் இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக வந்து பயிரிடப்பட்டிருக்கும் கறிமிளகாய் கன்றுகள், வெங்காயம், மரவள்ளி போன்ற பயிர்களை அழித்து வந்தன.

கோரைக்கிழங்கு, நாக்கிலிப்புழு ஆகியவற்றைத் தின்பதற்காகவரும் இப்பன்றிகள் வயல் காணிகளுக்குள் புகுந்து பயிர்களை துவம்சம் செய்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (202-135)

# சங்கானை மத்தியஸ்தர் சபையினால் 400 பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.25

வலி.மேற்கு சங்கானை மத்தியஸ்தர் சபையில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 552 பிணககுகள் பதியப்பட்டு 400 இற்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இத் தகவலைச் சபையின் தவிசாளர் வை.சிவபாலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிததுளளதாவது:

எமது மத்தியஸ்தர் சபையில் 2006 ஆம் ஆணடு 174 பிணக்குகளும் 2007 ஆம் ஆண்டில் 362 பிணக்குகளும் இந்த ஆண்டில் இன்றுவரை 16 பிணக்குகளும் பதியபபட்டுள்ளன. இவை காணி, குடும்பம், பணம், சீட்டு போன்றவை தொடர்பான பிணககுகளாகும்.

இவற்றுள் 400 பிணக்குகளுக்கு நிரந்தர மத்தியஸ்தம் செய்துவைக்கப்பட்டுள்ளது. ஏனையவை தற்போது விசாரணையில் உள்ளன.

பிணககுகளை மத்தியஸ்தம் செய்வதற்கு சஙகானைப் பிரதேச செயலரும், கிராம அலுவலர்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினர் - என்றார்.

இதேவேளை -

இம் மத்தியஸ்தர் சபையின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் மார்ச 16 ஆம் திகதி வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

## பண்டத்தரிப்பு இ.கல்லூரியில் சண்முகசுந்தரம் கலையரங்கம்

வலி.தென்மேற்கு, ஜன.25

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலையரங்கத்திற்கு "சண்முகசுந்தரம் கலையரங்கம்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், ஓய்வுபெற்ற சங்கானை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளருமான எம்.[illegible] அபிவிருத்தி[illegible] 75 [illegible] ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார் என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார். (202-135)

# யுனிகுளோறி கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களுக்கான நிர்ணய விலைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

குடாநாட்டிற்கு "யுனிகுளோறி VIII" கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பொருள்களை நிர்ணயித்த விலையிலேயே விற்பனை செய்யுமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இப்பொருள்களைத் தருவித்த நிறுவனங்கள் குறித்த விலையில் பொருள்களை விற்பனை செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் சம்மதம் தெரிவித்துள்ளன.

எனவே அவ்விலைகளிலேயே பொருள்கள் விற்பனை செய்யப்படவேண்டுமென அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

யுனிக்குளோரியில் எடுத்துவரப்பட்ட பொருள்களின் விலைகள் வருமாறு:

| இல | பொருட்களின் வகை | அலகு | விலை |
|---|---|---|---|
| 1 | சீமெந்து | பைக்கற் | 1,100.00 |
| 2 | அலுமினிய பட்டம் | தனி | 175.00 |
| 3 | அமோனியம் சல்பேற் | கி.கி | 140.00 |
| 4 | L கேடர் | கட்டு | 2,650.00 |
| 5 | சாரயம் | போத்தல் | 490.00 |
| 6 | கூரை சீற் | தனி | 900/=, 1650/= |
| 7 | ஆட்டா மா | கி.கி | 52.00 |
| 8 | பற்றரி அசிட் | கலன் | 1,200.00 |
| 9 | சையிக்கிள் ரயர் ரிப் | தனி | 500/=, 200/= |
| 10 | பிஸ்கட் | கி.கி | 192.00 |
| 11 | பிலீச்சிங் பவுடர் | கி.கி | 70.00 |
| 12 | பல்ப்ஸ் | தனி | 36/= , 60/= |
| 13 | மெழுகு திரி | தனி | 16.00 |
| 14 | கால் நடை உணவு | பைக்கற் | 760.00 |
| 15 | மிளாகாய் | கி.கி | 65.00 |
| 16 | சொக்கிளேற் | பெட்டி | 150.00 |
| 17 | துணி | மீற்றர் | 70.00 |
| 18 | தேங்காய் எண்ணெய் | லீற்றர் | 150.00 |
| 19 | கோப்பி | கி.கி | 360.00 |
| 20 | கணனி | தனி | 35,000.00 |
| 21 | மல்லி | கி.கி | 260.00 |
| 22 | நற்சீரகம் | கி.கி | 230.00 |
| 23 | பருப்பு | கி.கி | 110.00 |
| 24 | ரீல்லர் | தனி | 1,500.00 |
| 25 | கருவாடு | கி.கி | 600.00 |
| 26 | சில்வர் பேணி | தனி | 50.00 |
| 27 | கொப்பி | கட்டு | 9.00 |
| 28 | இரும்பு பட்டம் | தனி | 205.00 |
| 29 | உள்ளி | கி.கி | 110.00 |
| 30 | பயறு | கி.கி | 145.00 |
| 31 | கிரைண்டர் | தனி | 1700/= - 2500/= |
| 32 | விளக்கு | தனி | 325.00 |
| 33 | மாயரின் | பெட்டி | 200.00 |
| 34 | பாய | தனி | 150.00 |
| 35 | பால் மா | தனி | 255.00 |
| 36 | குடி தண்ணீர் | தனி | 40.00 |
| 37 | மோட்டார் சைகிள் | தனி | 46000/= - 86000/= |
| 38 | நுளமபுத்திரி | தனி | 40.00 |
| 39 | உழுந்து | கி.கி | 145.00 |
| 40 | நெல் | கி.கி | 35.00 |
| 41 | தீந்தை | பெட்டி | 750.00 |
| 42 | பப்படம் | பெட்டி | 75.00 |
| 43 | கச்சான் | கி.கி | 190.00 |
| 44 | மிளகு | கி.கி | 105.00 |
| 45 | பிளாஸ்டிக் கோப்பை | தனி | 10.00 |
| 46 | பிளைவூட் சீற் | தனி | 1,500.00 |
| 47 | உருளைக்கிழங்கு | கி.கி | 90.00 |
| 48 | அரிசி | கி.கி | 65.00 |
| 49 | கயிறு | கட்டு | 230.00 |
| 50 | சவ்வரிசி | கி.கி | 90.00 |
| 51 | உப்பு | கி.கி | 25.00 |
| 52 | சாறம் | தனி | 290.00 |
| 53 | ஸ்கொட்டிங் பான் | தனி | 650.00 |
| 54 | சம்போ | பெட்டி | 75.00 |
| 55 | மாயரின் | பெட்டி | 200.00 |
| 56 | பாய் | தனி | 150.00 |
| 57 | மெனபாணம் | தனி | 185.00 |
| 58 | சேயாமீந | பை | 40.00 |
| 59 | உழுத்தம பருப்பு | கி.கி | 175.00 |
| 60 | சீனி | கி.கி | 62.00 |
| 61 | சூரியகாந்தி எண்ணெய் | போத்தல் | 225.00 |
| 62 | புளி | கி.கி | 70.00 |
| 63 | தெயிலை | கி.கி | 245.00 |
| 64 | மாபிள் | தனி | 85.00 |
| 65 | ரின் மீன் | தனி | 105.00 |
| 66 | முறுக்கு கம்பி | கட்டு | 200.00 |
| 67 | யூரியா | மூடை | 1,300.00 |
| 68 | மரக்கறி எண்ணெய் | லீற்றர் | 230.00 |
| 69 | [illegible] அறக்கும் இயந்திரம் | தனி | 6,000.00 |
| 70 | [illegible]லைக்கம்பி | சுருள் | 6,500.00 |
| 71 | ரீவி அண்டனா வயர் | சுருள் | 2,200.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவலர் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் ஆரம்ப கால தலைவரும் போசகரும் தும்பளை யோகசாந்தி நிலையத்தின் ஆலோசகருமாகிய

**கலாநிதி**
**நாகலிங்கம் சிவயோகன்**

(தலைவர், பௌதிகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்கள் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சின் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவால் விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தியமைக்கான அதி உயர் விருதான 'இளம் விஞ்ஞானி - 2006' இனைப் பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, அவரின் சேவை தொடர்ந்தும் எமது மண்ணிற்குக் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

**நாவலர் விளையாட்டுக் கழகம்**
**தும்பளை யோகசாந்தி நிலையம்,**
தும்பளை, பருத்தித்துறை.
(சி/551196)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Diploma in Hardware Engineering*
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software ஊடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 28/01/2008 - 9AM


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 21★04★1940
மறைவு: 05★02★2007

**சித்த வைத்திய கலாநிதி**
**வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி அவர்கள்**

**திதி: அபரபக்கத் திருதியை (25.01.2008)**

அப்பாவே, அப்பாவே அலறுகின்றோம்
அற்றாமல் மெய்யெல்லாஞ் சோருகின்றோம்
எம்மால் ஆன பிழை ஏதுமுண்டோ
ஏமாந்தோம் நீங்கள் இருப்பீர்கள் என்றே - என்றும்
புன்னகையும் புத்துணர்வும் தந்த அப்பா
பூவுலகில் இனி எங்கே காண்போம் அப்பா!

''கந்தையா வளவு''
259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (70355)
குடும்பத்தினர்.

## அறிவித்தல்

**1st in Com., B.Com. (I, II & III)**

19, 20.01.2008ஆம் திகதிகளில் தடைப்பட்ட விரிவுரைகள் யாவும் 26.01.2008முதல் அதே நேர அட்டவணையில் 464, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவில் நடைபெறும்.

(சி/551193) DCM ஆசிரியர்கள்.

## கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் கண்காணிப்பாளராக ஐ.தே.க. சார்பில் ஜயலத் ஜயவர்த்தன

கொழும்பு,ஜன.25

கிழக்கு மாகாண சபை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் உதவிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயவர்த்தனவைக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நியமித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

## துளிர்கள் நிறுவனத்தின் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.25

துளிர்கள் நிறுவனம் நடத்தி வரும் தொழிற்பயிற்சி நெறியின் இரண்டாவது பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நிறுவன இயக்குநர் கே.எஸ். ரகுவின் 'இதயங்கள் இருக்கும் வரை' என்னும் இறுவட்டின் வெளியீடும் அண்மையில் யாழ்.அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெற்றன.

நிறுவன இயக்குநர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ கலந்து கொண்டார்.

அகவொளி குடும்ப உளவளத் துணை நிலைய இயக்குநர் வண.பிதா எஸ்.கே. இராசநாயகம் அடிகளார், வண.பிதா எஸ். ஸ்ராலின் அடிகளார் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினர்.

யாழ்.தேசியற் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் இறுவட்டை வெளியிட்டு மதிப்புரை நிகழ்த்தினார். துளிர் நிறுவன மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (202-51)

## தென்மராட்சி அதிபர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு நிதி, நிர்வாக பிரமாணங்கள் தொடர்பான ஆளுமை விருத்திச் செயலமர்வு நாளை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202-207)

## விவசாய நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.25

அமரர் கணேஷ் புஸ்பமலர் ஞாபகார்த்தமாக விவசாயம் தொடர்பான நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. நூலின் வெளியீட்டு விழா மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தில் சம்மேளன தலைவர் சி.பொ.வ.பா.க முதலியார் தலைமையில் இடம்பெற்றது. (202-95)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் நலன்விரும்பியுமான

**திருமதி ஜோய்மகிழ் மகாதேவன்**

அவர்கள் யாழ்.மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளமையை பெருமகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (70436)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், ப.மா. சங்கம், பாடசாலை அபி.சங்கம்.


## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்களை யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

**EURO GROUP OF COMPANIES**
35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06. TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD. TEL: 0212223974, 0774207963
(C551183)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

## External Degree

(Jaffna University)

- 1st in Com, BCom (Part I), BCom (Part II), BCom (final)
- GAQ, BA I, BA (final) ஆகிய பிரிவுகளுக்கான

ஆரம்பம்: 26.01.2008

**aat (SriLanka)**
Intermediate level & Final
Medium - Tamil & English Exam:- Jun 2008
ஆரம்பம்:- 26.01.2008 Medium - English & Tamil

Further Details:
**Director**
**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road (Near Commercial Bank). Jaffna.
(C/551192)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி கீதாஞ்சலி முருகதாஸ் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி அன்னலட்சுமி கணபதிப்பிள்ளை**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம், வல்வெட்டித்துறை. (70409)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர், மாணவர்கள்.

## ஈரவிழிகளுடன் 2 ஆம் ஆண்டில் உங்கள் நினைவுகளில்



மலர்வு 18 . 10 . 1952
மறைவு 17 . 01 . 2006

**அமரர் சுப்பிரமணியம் ஜெயரட்ணம்**

(சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள்வங்கி, யாழ்ப்பாணம்)

திதி: 25.01.2008

எங்களை அன்போடு அரவணைத்து ஆரோக்கிய அன்புத் தெய்வமே! வதிவர் "ஜேயம்" பெற்று ஊர்போற்றி வாழ்ந்த உத்தமரே! உங்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக இறைவனை வேண்டி இரண்டாம் ஆண்டில் பிரார்த்திக்கின்றோம்.

31 கொண்டலடி வீதி, நல்லூர். (70434)

உங்கள் நினைவாக: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளா? அரசுத் தரப்புப் பிரதிநிதிகளா?

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக' சுமார் ஒன்றரை வருடத்துக்கும் அதிகமான காலத்தை இழுத்தடித்து, ஒவ்வொன்றும் பல மணி நேரம் நீடித்த அறுபதுக்கும் அதிகமான அமர்வுகளை நடத்தி, கடைசியில் ஒரு சிறிய இடைக்கால அறிக்கையை முன்வைத்திருக்கின்றது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு.

ஆக, 1988இல், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுகளை, நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதியைக் கோரும் ஒரு துண்டு ஆவணத்தோடு வந்திருக்கிறது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு.

அரசமைப்புச் சட்டத்தில் விலாவாரியாகக் குறிப்பிடப்பட்டு, சட்டரீதியான அந்தஸ்தும் பெற்றுள்ள இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு யாருடைய சிபாசும் அவசியமானதல்ல. ஜனாதிபதியே தம்பாட்டில் அதைச் செய்யமுடியும். அதற்கான அதிகார வலுவும் சட்டப்பலமும் அவர் கைவசம் உள்ளன.

அறுபது அமர்வுகளுக்கு மேல் கூடி ஆராய்ந்து, ஒன்றரை வருடத்தை இழுத்தடித்தபின்னர், யதார்த்தத்தில் ஏற்கனவே உள்ள ஒரு விடயத்தைத்தான் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்ட முடிந்திருக்கின்றது இந்த அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால்.

அப்படியிருந்தும் கூட, அரசமைப்பின் அந்தப் பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முக்கியமான அதிகாரங்கள் இவை, இவைதாம் என்று வற்புறுத்திக் கூறக்கூட அந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவால் இயலாமல் போயிற்று என்பதுதான் விசனத்துக்குரிய விவகாரம்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படவில்லை. பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கட்சியும், ஜே.வி.பியும் அதிலிருந்து வெளியேறிய நிலையில் அதில் ஆக பதினான்கு கட்சிகளின் பிரதிநிதிகளே எஞ்சியிருந்தனர்.

அந்தப் பதினான்கு கட்சிகளில் பன்னிரண்டு கட்சிகள் மஹிந்தரின் அரசில் அமைச்சுப் பதவிகளுடன் அவரின் அடிவருடிகளாக ஒட்டிக்கொண்டு இருப்பவை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி - ஜனநாயகப் பிரிவு, ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய கூட்டமைப்பு (நு ஆ), மலையக மக்கள் முன்னணி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தேசிய காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி ஆகியனவே அந்தப் பன்னிரண்டுமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், மேலக மக்கள் முன்னணியுமே அரசுக்கு வெளியே இருப்பவை.

இவ்வாறு பதினான்கில் பன்னிரண்டு கட்சிகள் அரசுக்குள் இருப்பதனால்தான் போலும், ஜனாதிபதி மஹிந்தரின எதிர்பார்ப்பை அப்படியே எழுத்து வடிவத்தில் தமது இடைக்காலத் திட்டமாகக் கொண்டுவந்து ஒப்புவித்திருக்கின்றன அக்கட்சிகள்.

அதிகாரப்பகிர்வுக்கான அரசமைப்பின் அந்தப் பதின்மூன்றாவது திருத்தத்தில் பல முக்கிய அதிகார விடயங்கள் மாகாணங்களுக்கும், மத்திய அரசுக்கும் பொதுவான அதிகாரப் பட்டியலில் உள்ளன. அவற்றை ஜனாதிபதியோ அரசோ விரும்பினால்தான் மாகாணங்களுக்கு விட்டுக்கொடுக்க முடியும்.

அப்படியான பிரதான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குங்கள் என்று ஜனாதிபதியைப் பார்த்து சிபார்சு செய்யக்கூட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தைரியமும் திராணியும் இருக்கவில்லை. இது தொடர்பான தமது அதிருப்தியை தங்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக்கொண்டு போனமையைத் தவிர உருப்படியாகத் தமது உணர்வை - நிலைப்பாட்டை - அவர்களால் வெளிப்படுத்தவே முடியவில்லை என்பதுதான் நிலைமை.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் ஜனாதிபதிக்கு இப்போது வழங்கப்பட்டுள்ள சிபார்சின் பிரகாரம், ஏற்கனவே பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபைகளில் கிழக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தப்படும். வடக்கு மாகாண சபையை நிர்வகிக்க இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும் - என்றெல்லாம் கூறப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தொடரும் அராஜக நிலையில் சுயாதீனமான - சுதந்திரமான - ஒரு தேர்தலுக்கு இப்போதைக்கு வாய்ப்பே இல்லை என்பது தெளிவு.

அதேசமயம், வடக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாகம் என்பதும் வெறும் 'கப்ஸா'.

அங்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக மாகாண ஆளுநரே ஆட்சி நிர்வாகத்தைத் தொடர்வார். அவருக்கு ஆலோசனை வழங்குவதற்கே ஓர் இடைக்கால ஆலோசனைக்குழு அமைக்கப்படுமாம். அதுவே, ஜனாதிபதியின் விருப்பை நிறைவு செய்யும் விதத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் ஒப்படைக்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திற்கான ஆட்சி ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநராலேயே கொண்டு நடத்தப்படும் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் செய்யும் எண்ணம் ஜனாதிபதி மஹிந்தருக்கு இல்லவே இல்லை என்பதும் உறுதி.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அங்கு ஆளுநருக்கு வெறும் ஆலோசனைகளை மட்டும் வழங்கும் சபையை அமைக்க எண்ணும் ஜனாதிபதியும் அவரது அரசுப் பிரதிநிதிகளும், அந்த ஆலோசனைக்குழுவை இடைக்கால நிர்வாகமாகக் காட்ட எத்தனிக்கின்றமை விநோதமானது.

ஆக, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியின் எதிர்பார்ப்பை சிரமேற்கொண்டு தாங்கி நிறைவு செய்திருக்கின்றது. அவ்வளவே.

# இலங்கையில் ஊடகவியலாளர்களைப் பாதுகாத்து கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துக!

## 'ஆர்டிக்கிள் - 19' அமைப்பு ஜனாதிபதிக்கு விசனத்துடன் கடிதம்

கொழும்பு,ஜன.25

ஊடகவியலாளர்களுக்கு எதிராக அண்மைக்காலத்தில் அரசினதும் ஆயுதப் படைகளினதும் உறுப்பினர்கள் மேற்கொண்ட தொல்லைகள், மோசமான நடத்துகைகள் மற்றும் 2004 ஆம் ஆண்டு முதல் அடிக்கடி இடம்பெறும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை ஒட்டிய விடயங்களில் சம்பந்தப்பட்டோருக்கு விசேட சட்ட விலக்களிப்பு சலுகை வழங்கப்படுகின்றமை போன்றவை உட்பட இலங்கையில் கருத்துவெளியிடும் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து, கருத்துச் சுதந்திரத்துக்கான சர்வதேச அமைப்பான 'ஆர்ட்டிக்கிள் - 19' என்ற மையம் ஆழ்ந்த கவலை தெரிவித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கின்றது.

அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினாலும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவினாலும் பல ஊடகவியலாளர்கள் 'இராஜத் துரோகிகள்' என முத்திரை குத்தப்பட்டுள்ளனர் என்பது பற்றிய பல அறிக்கைகள் எமக்குக் கிடைத்துள்ளன.

புலிகளிடம் அரசுப் படைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்த தகவல்களை வெளியிட்டமைக்காக மூத்த பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸை 'பயங்கரவாதத்தை வளர்ப்பவர்' எனப் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் குற்றம் சுமத்தியது.

சமீபத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா அரச தொலைக்காட்சி நிலையத்துக்குள் நுழைந்து அங்கிருந்த பணியாளர்களைத் தாக்கியுள்ளார்.

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியவற்றையும், அவற்றை மீறுவோருக்கு வழங்கப்படும் விசேட சட்ட விலக்களிப்பு சலகைகளையும் இந்தச் சம்பவங்கள் சில எடுத்துக்காட்டுகின்றன.

2004 முதல் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளருக்கு எதிரான பல தாக்குதல்கள், ஆட்கடத்தல்கள், படுகொலைகள் - குறிப்பாக 'உதயன்', 'சுடர் ஒளி', 'மட்டக்களப்பு ஈழநாதம்', 'தமிழ் நெற்' போன்ற தமிழ் ஊடகங்களுக்கு எதிராக - இடம்பெற்று வருகின்றன.

'சட்டன' பத்திரிகை ஆசிரியர் சேனக எக்கநாயக்க சித்திரவதை செய்யப்பட்டு 9 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டார். இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்களை அரசு கையாளுகின்ற முறைமை குறித்து எமது அமைப்பு ஆழ்ந்த அதிருப்தி அடைந்துள்ளது.

இவ்விடயத்தில் சில சம்பவங்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளன. குற்றமிழைத்த எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவேயில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ள நிலைமையில் இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரம் மேலும் மோசமாக சீர்கெடும் ஆபத்துள்ளது.

எனவே இலங்கையின் அரசமைப்பிலும், இலங்கையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான பட்டயத்திலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து வெளியிடும் சுதந்திரம் இலங்கையில் நிலை நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்தும்படியும் -

மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோருக்கு சட்ட விலக்களிப்பு வழங்கும் சலுகைகளுக்கு முடிவு கட்டி, அத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்பதற்கு சரியான மூலவளங்களை வழங்கி அரசியல் உறுதி எடுக்கும்படியும் -

அரசின் நேரடித் தாக்குதல்கள் மற்றும் மறைமுக அழுத்தங்கள் இன்றி ஊடகவியலாளர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் செயற்படக் கூடிய சூழலை உருவாக்கும்படியும் -

இலங்கை அரசை நாம் கோருகின்றோம் - என்று உள்ளது. (உ)

# செஞ்சிலுவையின் நோயாளர் விமான சேவை; மீண்டும் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாணத்தில் இருந்து அவசர நோயாளர்களை விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச்செல்லும் பணியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கடந்த இரு வாரங்களாக இடைநிறுத்தியுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நோயாளர்களைக் கொழும்புக்கு அழைத்துச் செல்லும் பணியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொண்டு வந்தது.

யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்து இரத்த மாதிரிகளை எடுத்துச் செல்லவும், அவசர மருந்துகளைக் கொழும்பில் இருந்து எடுத்து வரவும் இந்த விமானச் சேவையை செஞ்சிலுவைக் குழு பயன்படுத்தியது.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தின் பதில் வதிவிடப் பிரதிநிதி செல்வி மரிக்கோவிடம் கேட்டபோது -

குடாநாட்டில் இருந்து அவசர நோயாளர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்குப் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் சேவை இடம்பெற்று வந்தது. எனினும் கடந்த இரண்டு வாரங்களாகத் தொழில் நுட்பப் பிரச்சினை காரணமாக அது தடைப்பட்டுள்ளது. அதனை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி வருகின்றோம். மிக விரைவில் அந்த விமான சேவை ஆரம்பிக்கப்படும் என நம்புகின்றோம் - என்றார். (50-141)

# மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கான உர விநியோகம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.25

குடாநாட்டு விவசாயிகளின் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கான உர விநியோகம் நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவைத் திணைக்களம் தெரிவித்தது.

யூரியா, வி.மிக்ஸர் ஆகிய உரங்களை ஓர் அந்தர் 3 ஆயிரத்து 550 ரூபா வீதம் சகல கமநல சேவை நிலையங்களிலும் மேட்டுநிலப் பயிர் செய்யும் விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் தற்போது நெல் அறுவடை மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இம்முறை காலபோக நெற்செய்கை பெரும் விளைச்சலைக் கொடுத்துள்ளமையால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் அறுவடையில் ஈடுபட்டு வருகின்றார்கள். (50)

# மருந்தகத்திற்குக் காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

சாவகச்சேரி பிரதேச சபையினால் சரசாலை உப அலுவலகப் பிரிவில் நிர்மாணிக்கப்படவுள்ள ஆயுள்வேத மருந்தகத்திற்குக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் மருந்தகம் நிர்மாணிப்பதற்கு நான்கு பரப்புக் காணியினை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபை இவ்வருடம் இரண்டு ஆயுள்வேத மருந்தகங்களை சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## நாளை

| | |
|---|---|
| தை - 12 | சனிக்கிழமை 26.01.2008 |
| நட்சத்திரம் : | பூரம் பி.ப.:12.45 வரை |
| திதி : சதுர்த்தி | மு.இ.: 06.56 |
| சங்கடஹர சதுர்த்தி | |
| சுபநேரம் : | 03.36 - 05.06 |
| ராகுகாலம் : | 09.36 - 11.06 |

# பிரதேச செயலர் பிரிவுகளில் சுற்றாடல் மேம்பாட்டுக் குழுக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.25

குடாநாட்டில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பிரதேச சுற்றாடல் மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர்களை தலைவராகக் கொண்டு இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவில் பிரதேச சுற்றாடல் மேம்பாடு தொடர்பாக பிரதேச செயலக மட்டத்தில் ஆராய்ந்து தீர்வு காணப்படும்.

டெங்கு, திண்மக் கழிவு, கழிவு நீர் வாய்க்கால், உற்பத்தி நிறுவனங்களின் சுகாதாரம் உட்பட 20 வகையான சுகாதார மேம்பாடுகள் பிரச்சினைக்கு காலாண்டு கூட்டத்தில் தீர்வு காணப்படும்.

இக்கூட்டத்தில் நிர்வாகிகளாக பிரதேச சபை, கால்நடை வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி உட்பட 14 பேர் நிர்வாக சபையினுள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இக்குழு மூலம் இனிவரும் காலங்களில் சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வாய்ப்புண்டு என யாழ். செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (202-95)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

சமாதான தினத்தை முன்னிட்டு யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம் மாணவர்களிடையே நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.நகரில் சிவகுருநாதர் வீதியில் உள்ள கழக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பரிசு பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:

அ.அனோஜான் (வேலாயுதம் ம.வித்தி.), சா.ஹரிகரன் (நெல்லியடி ம.ம. வித்தி.), சௌ.சங்கீதா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.) (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.25

மா.சீவரத்தினத்திற்கு கலாபூஷணம் விருது வழங்கப்பட்டுள்ளமையைப் பாராட்டி மயிலங்காடு கிராம அபிவிருத்திச் சங்கம், ஞானமுருகன் விளையாட்டுக்கழகம், ஸ்ரீமுருகன் சன சமூக நிலையம் ஆகியவை இணைந்து நடத்தும் விழா நாளைமறுதினம் காலை 9 மணிக்கு ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் அ.சோதிநாதன் கலந்துகொள்வார். (202)

* * *

வடமராட்சி,ஜன.25

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் சமூக கற்கைநெறிப் பயிற்சியும் மனை முகாமைத்துவ தொழில்திறன் கண்காட்சியும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணிமுதல் பி.ப. 3மணிவரை நடை பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்துகொள்வார். (202-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மானிப்பாய் மகளிர் கல்லூரியின்
நலன் விரும்பி
**திரு. இரா. வசந்தசேனன்**
அவர்கள் யாழ்.மாவட்ட நீதிபதியாக நியமனம்
பெற்றுள்ளமையை பெருமகிழ்வுடன்
வாழ்த்தி வரவேற்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பழைய மாணவிகள் சங்க
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,

(70437)


## அன்பு வெளியீடு

**தரம்-4 மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்தும்**

**மாதிரிப் பரீட்சைகள்- 2008**

* வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலைகள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
* நேரடித்தொடர்புகளுக்கு:

**அன்பொளி கல்வியகம்** யாழ்ப்பாணம். (சி/551200) **அன்பொளி கல்வி நிலையம்** சாவகச்சேரி.

## தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள்- 2008

**பாடசாலைக்குரிய வெளியீடு**

ஆசிரியர்: **திரு.வே.அன்பழகன்** அவர்களின் தரம்-5 மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

* 16.01.2008 புதன்கிழமை பாடசாலைகளுக்குரிய முதலாவது பரீட்சை வினாத்தாள் வெளிவந்துவிட்டது.
* இரண்டாவது பரீட்சை 30.01.2008 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
* பாடசாலைகளின் நன்மை கருதி விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந்த வினாத்தாள்களைப் பெற்றுப் பயனடையவும்.

நேரடித் தொடர்புகளுக்கு:

**அன்பொளி கல்வியகம்** யாழ்ப்பாணம். (சி/551199) **அன்பொளி கல்வி நிலையம்** சாவகச்சேரி.


## The International Committee of the Red Cross

### Vacancy: Water and Habitat Field Officer

The International Committee of the Red Cross (ICRC) Sub-delegation in Jaffna has an opening for a WatHab (Water and Habitat) Field Officer.

**Responsibilities:**

* Undertakes field assessments and subsequently compiles project reports in the following areas
  - Water and sanitation in IDPs camps and other identified areas of needs
  - Shelter projects in IDPs camps
  - Water systems for NWS&DB
* Participates in creating appropriate methodologies and solutions for safe drinking water access in IDPs camps.
* Preparation of proposals, bills of quantity, reports and etc, related to Wathab Projects
* Prepares tender documents, and plays a major role during contractors' bidding-process and selection, in preparation of implementation of new projects.
* Undertakes field visits throughout the District to monitor progress of ongoing projects.
* Attends and actively participates in technical meeting and subsequently compiles reports.
* Assists Logistics department in following-up of ordered materials from Colombo and Jaffna.
* Carries out routine office work including reporting and filling.

**Requirements:**

* Bachelors Degree in Science or National Diploma in Technology or equivalent.
* Minimum 2 years experience at a similar position.
* Experience with humanitarian organisations is an asset.
* Age between 28 - 45.
* Fluent in English and Tamil.
* Computer literacy in MS office; AutoCAD is an added advantage.

**Personal Qualities:**

* He/She should be responsible, initiative and capable to work independently
* Emphatic person with strong commitment to humanitarian work
* Strong organizing and planning skills
* Energetic, flexible and good team player
* Adaptability to different situations and resistant to stressful situations
* Self-starter
* Knowledge of Jaffna District
* The candidate should also be willing to travel around the country.

**Date of employment: Immediate**

**Duration of employment: One year, extendable**

The ICRC offers a competitive salary and social benefits. Interested applicants with proper credentials should send their complete CV in English together with a motivation letter, copies of certificates, references and contact phone number on or before 08th of February 2008 to:

**Administrator,**
**ICRC Sub-delegation,**
**120 Temple Road,**
**Jaffna.**

Only Candidates meeting the above mentioned criteria will be considered.

(C/551203)


## இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் பாடநெறிகள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர்தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

Company Secretarial Services (Pvt) Ltd.
SMS 011 - 4520270 Name & Address for details
Contact: 0777 317043 (சி/54884)


## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.25

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி தம்பதியர் கலந்து கொள்வர். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜன.25

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்.மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதிமன்ற நீதிவானுமாகிய திருமதி ஜோய் மகாதேவா கலந்து கொள்வார். (202)

* * *

வலி.தென்மேற்கு, ஜன.25

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், இளவாலைதிருக்குடும்ப கன்னியர்மட மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். விசேட விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொள்வார். (202-135)

## சைக்கிள்களுக்கு உரிமத் தகடுகள்

யாழ்ப்பாணம், ஜன.25

சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் சைக்கிள்களுக்கு இவ் வருடத்திற்குரிய உரிம இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் தமது சைக்கிள்களுக்கு மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிம இலக்கத் தகடுகளைப் பெற்று அதன் பின்னர் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு ஆறுமுகம் அறிவித்துள்ளார். (202-207)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வருமாறு-

**சென்.சாள்ஸ் ம.வி.**

வி.ஜான்சி-2ஏபி, ர.றஜிதா-2ஏபி, அ.அருள்வதனி- ஏ2பி, கு.நிஷாந்தினி- ஏபிசி, ச.றெஜிதா -ஏபிசி, ஏ.சுதாகரன்- ஏபிசி, ஜி.மதனமோகன்- ஏ2சி, ஜே.ஜீவிதா- ஏ2சி, ஜி.மேரிஜெனிற்றா-பி2சி, கே.அலன்-பி2சி.

## வடலியடைப்பு விநாயகர் ஆலயத் திருப்பணி பூர்த்தி

வலி.தென்மேற்கு, ஜன.25

வடலியடைப்பு- புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட திருப்பணி மற்றும் புனருத்தாரண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இதனையடுத்து இவ்வாலயத்தில் பஞ்சகுண்ட பக்ஷ உத்தம மஹா கும்பாபிஷேகத்தை அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடத்துவதற்கு ஆலய பரிபாலன நம்பிக்கை பொறுப்பாளர் சபையினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (202-135)

## அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் விழா

வலி.தென்மேற்கு, ஜன.25

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் புதிய மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த 18 ஆம் திகதி வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில்அளவெட்டி பெருமாள்கடவை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச.வைத்தீஸ்வர குருக்கள் ஆசியுரை நிகழத்தினார். வித்தியாலய நிறுவுநரின் பேரன் ச.செல்வநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (202-135)


**இதோ!**

**சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாசநாளங்களில் உண்டாகும்சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

## சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/54169)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14 . 01 . 1929

மறைவு 26 . 12 . 2007

**திருமதி வள்ளிப்பிள்ளை அழகரத்தினம்**

பத்து மாதம் சுமந்து பார்புகழ உயரவைத்து
பாரினில் எமை பரிதவிக்க விட்டு பரமனடி சேர்ந்து
முப்பத்தொரு தினங்கள் மறைந்தனவே
எந்நாளும் உமை மறவோம் அம்மா.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (சி/551173)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் சிவகாமசுந்தரி**
"(குட்டியம்மா)"
**கோவிந்தசாமி**

தோற்றம் 26.09.1933

மறைவு 27.12.2007

எமது இல்லத்தில் நாளை (26.01.2008) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோ.நஜேந்திரராசா,
(இலங்கை மின்சாரசபை ஊழியர்),
ஏ.ஜி.ஏ ஒழுங்கை,
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

**குடும்பத்தினர்.**

(70440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்

# டெண்டுல்கர் சதம்; இந்தியா விறுநடை!

அடிலெய்ட், ஜன.25

சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் அரங்கில் 39 ஆவது சதத்தைப் பூர்த்திசெய்ய, அடிலெய்ட்டில் நேற்றுத் தொடங்கிய ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டமிழக்காமலிருக்கும் சச்சின் 124 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்தியா 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகின்றது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில் ஆஸ்திரேலியா தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இந்நிலையில் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று அடிலெய்ட்டில் ஆரம்பமானது.

இந்திய அணியில் வசீம் ஜாபர் நீக்கப்பட்டு ஹர்பஜனுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆஸ்திரேலிய அணியில் ஷோன் ரெய்ற் நீக்கப்பட்ட சுழற்பந்துவீச்சாளர் பிரட் ஹொக் அணியில் இடம்பிடித்தார். காயத்திலிருந்து மீண்டு ஆரம்ப வீரர் மத்தியூ ஹைடன் அணியில் இணைந்தார்.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் களமிறங்கியது. தொடக்க வீரர்களாக வீரேந்திர ஷேவாக்கும் இர்பான் பதானும் களமிறங்கினார். அவர்கள் இருவரும் இந்திய அணிக்கு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தும் வகையில் 7 ஓவர்களில் 34 ஓட்டங்களைக் குவிக்கனர். இந்நிலையில் ஜோன்ஸனின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ற்றிடம் பிடி கொடுத்து 9 ஓட்டங்களுடன் பதான் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ராகுல் டிராவிட் மிகவும் நிதானமாக ஆட, மறுமுனையில் நின்ற ஷேவாக் தனது வழக்கமான அதிரடியாட்டத்தைத் தொடர்ந்தார். நிலைத்து நின்ற ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட டிராவிட் 18 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஜோன்ஸனின் வேகத்தில் பொண்டிங்கிடம் பிடி கொடுத்து பெவிலியன் திரும்பினார். மதிய போசன இடைவேளையின் போது இந்தியா 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 89 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடக்கத்திலிருந்தே சிறப்பாக ஆடிவந்த ஷேவாக் 75 பந்துகளில் தனது அரைச் சதத்தை எட்டினார். டெஸ்ட் அரங்கில் அவருக்கு இது 13ஆவது அரைச்சதமாகும். கடந்த 11 டெஸ்ட்களுக்கு பிறகு ஷேவாக் எடுத்துள்ள முதல் அரைச்சதம் இதுவாகும். அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த ஷேவாக்கின் ஆட்டத்திற்கு பிரட் லீயின் வேகம் முற்றுப்புள்ளி வைத்தது. 63 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஹைடனிடம் பிடி கொடுத்து ஷேவாக் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம்புகுந்த செளரவ் கங்குலி 7 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்த நிலையில் ஹொக்கின் சுழலில் எல்.பி.டபிள்யூ முறையில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அப்போது இந்தியா 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து ஜோடி சேர்ந்த சச்சின், லக்ஸ்மன் ஆகியோர் சிறப்பாக ஆடி அணிக்கு நம்பிக்கை தந்தனர். சச்சின் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். 92 ஓட்டங்களிலிருந்த போது முறையே சிக்ஸர், பவுண்டரி அடித்து தனது 39ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார் சச்சின். இந்தத் தொடரில் இது அவரது இரண்டாவது சதமாகும்.

மறுமுனையில் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கிய லக்ஸ்மன் அரைச்சதம் அடித்து மகிழ்ந்தார். இது அவருக்கு 32ஆவது அரைச் சதம் ஆகும். 51 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவர் பிரட் லீயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இந்த ஜோடி தம்மிடையே 126 ஓட்டங்களைச் சேர்த்தது.



நேற்றைய முதல்நாள் ஆட்டம் முடிவடையும் போது இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சச்சின் டெண்டுல்கர் 124 ஓட்டங்களுடனும் (172 பந்துகள், 10 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்), மகேந்திர சிங் டோனி 6 ஓட்டங்களுடனும் (54 பந்துகள்) களத்தில் உள்ளனர்.

இன்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடரும்.

## மூத்த வீரர்கள் நீக்கம்; கும்ளே அதிருப்தி

அடிலெய்ட், ஜன.25

மூத்த வீரர்களை அதிரடியாக நீக்கியமை குறித்து இந்திய அணித்தலைவர் அனில் கும்ளே அதிருப்தி தெரிவித்துள்ளார்.

முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான இந்திய அணியிலிந்து கங்குலி, டிராவிட், லக்ஸ்மன் ஆகிய மூத்த வீரர்கள் நீக்கப்பட்டனர். இது அணியில் பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரச்சினை குறித்து அணித்தலைவர் கும்ளே அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:

"அடிலெய்ட் டெஸ்ட் தொடங்கவிருந்த நேரத்தில், மூத்த வீரர்கள் நீக்கப்பட்டமை எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. இத்தகைய அனுபவம் எனக்கும் ஏற்பட்டது உண்டு. எனவே அனுபவ வீரர்கள் நீக்கம் தொடர்பான விடயத்தை மறந்துவிட்டு, நடைபெற்றுவரும் டெஸ்ட்டில் கவனம் செலுத்த வேண்டும். இதனைச் சவாலாக எடுத்துக்கொண்டு, டெஸ்ட் தொடரைச் சமன் செய்ய சிறப்பாக ஆட வேண்டும்." - இவ்வாறு கும்ளே கூறினார்.

## 'சேர்' பட்டத்துக்கு சச்சின் தகுதியானவர்
### ரணதுங்க கருத்து

கொழும்பு, ஜன.25

'சேர்' பட்டம் பெற சச்சின் டெண்டுல்கர் தகுதியானவர் என்று இலங்கைக் கிரிக்கெட்டின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்கா கூறியுள்ளார்.

அன்மையில் இந்தியா வந்த இங்கிலாந்துப் பிரதமர் கோர்டன் பிரவுன், சச்சின் டென்டுல்கருக்கு 'சேர்' பட்டம் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்திருந்தார். இதனையடுத்து சச்சின் டென்டுல்கருக்கு 'சேர்' பட்டம் வழங்கப்படலாம் எனக்கருதப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கைக் கிரிக்கெட்டின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்க, 'சேர்' பட்டம் பெற சச்சின் முழுத் தகுதி படைத்தவர் என்று கூறியிருக்கின்றார். உலகின் சிறந்த ஆட்டக்காரர்களில் சச்சினும் ஒருவர் என்றும், அவர் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றார் என்றும், 'சேர்' பட்டம் பெறுவதற்கு அவர் பொருத்தமானவர் என்றும் அர்ஜுனா ரணதுங்கா கூறியுள்ளார்.

## விளையாட்டு அரங்குகளில்

## இலங்கை அணி ஆஸி. புறப்பாடு

கொழும்பு, ஜன.25

முத்தரப்புத் தொடரில் பங்கேற்கும் முகமாக மஹேல ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை அணி நேற்றுக் காலை ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றது.

இலங்கை, ஆஸ்திரேலியா, இந்தியா அணிகள் பங்கேற்கும் முத்தரப்புத் தொடர் அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இத்தொடருக்கான இலங்கை அணி நேற்று ஆஸிக்குப் புறப்பட்டது. முன்னதாக, ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைமையகத்தில் நடைபெற்ற பிரார்த்தனைகளில் இலங்கை அணி வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். அதன் பின்னர் இலங்கை அணி வீரர்கள் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

## மரண அறிவித்தல்கள்



### கந்தையா கந்தசாமி

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கோப்பாயை நிரந்தர முகவரியாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி(மோட்டார் மணியம், கந்தர்மடம்) நேற்று (24.01. 2008) வியாக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம்மா தம்பதியினரின் ஏக புத்திரனும், மார்க்கண்டு -தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகா அபிஷேகம் அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரி, ஜெகதீஸ்வரி(அ.ர.பா. வித்தியாலயம், வவுனியா) காலஞ்சென்ற அன்பரசி, சிவகுமார்(சுவிஸ்) காலஞ்சென்ற நந்தன் மற்றும் நளினி, சுரேஸ்குமார்(மின் இணைப்பாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம், தியாகலிங்கம், பரஞ்சோதி, ஜெயாதர்சினி, மகாலிங்கம், சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காந்திமதியின் அன்புச் சகோதரரும் சுபாசினி, புஸ்பா, மணிகண்டன், சுதாசினி, மணிவண்ணன், ரஜிதா, திருக்கேதீஸ்வரி, நிஷாந்தன், திருமகள், ஒளிநிலா, மாதங்கி, நந்திஸ், கோபிராம், தீஷாலினி, யாதுசாளினி, பிருந்திகா, வாபிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

லைன் பாம் அருகாமை,
ராஜபாதை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(68539)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்
தொ.இல. 0776184625

### திருமதி பென்னம்பலம் கனகம்மா

மலேசியாவை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா நேற்று (24.01.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர்ஆ.சீ. கநதையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகளும். இராமலிங்கம்-இராசம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற குமாரசிங்கம் மற்றும் மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகம்மா ஆகியோரின் மைத்துனியும் விஜயலட்சுமியின் (ஜேர்மனி) பாசமிகு தாயாரும், இராசலட்சுமி ,இராசையா,காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் நவரத்தினம் ஆகியோரின் சிறிய தாயாரும்,அரசரத்தினம் (ஜேர்மனி), ஜெயரத்தினம் (வவுனியா), குணரத்தினம்(சவூதி),பத்மினி ஆகியோரின் மாமியும் வினிஷியாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2008)வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி.

தகவல்:
பத்மினி(பப்பி)
மருமகள்

BARATHY
சித்தங்கேணி
ECONOMICS
M.C.சுதாகரன்
B.com(Hons)
வாரத்தில் 6
மணித்தியாலம்
A/L DAY CLASS
செவ்வாய்,வியாழன்
3.00-5.00 P.M
வெள்ளி,ஞாயிறு
6.30-7.30 A.M
அனுமதிகளைப்
பெற்றுக்
கொள்ளுங்கள்

### ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளையில் இன்று

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையில் இன்று காலை 8.30 மணிக்கு, பத்தும் விமான-2008, சீட்டிழுப்பு ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வங்கியின் 120 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இச்சீட்டிழுப்பு நடத்தப்படுகின்றது.

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் - இணுவில்
ECONOMICS
M.C.சுதாகரன் B.com(Hons)
A/L 2008, A/L DAY CLASS
REVISION - PAPER CLASS
சனி-ஞாயிறு
யாழ்.நகரில்-12.00-2.00 p.m
இணுவிலில்-4.00-5.30 p.m
A/L 2009
சனி-ஞாயிறு
பேரினப் பொருளாதாரம்
யாழ் நகரில்-11.00 a.m
இணுவில்-2.00 p.m
ஆரம்பம்-26.01.2008
மாணவர்கள்கவனத்திற்கு
யாழ் மாவட்டத்தின் சிறந்த பொருளியல்
ஆசானின் நீண்டகால கற்பித்தல்
அனுபவத்தில்A/L 2007 இன் யாழ்
மாவட்டத்தில் என்றும் இல்லாத

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் வேலுப்பிள்ளை(வேலாயுதம்)

(ஓய்வூதியர், கைதடி முதியோர் இல்லம்)

இருபாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை (வேலாயுதம்) நேற்று (24.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான ஆறுமுகம் - லட்சுமியின் மகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தசாமி, சண்முகநாதன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வரதராஜா,மாதவராஜா, வைகுந்தராஜா, ஸ்ரீதேவி மற்றும் கௌத்துவமணி, வரதலட்சுமி, விஜயலட்சுமி, நாகலட்சுமி, ஸ்ரீதரன்(பிரான்ஸ்), ராதா(பிரான்ஸ்), பிறேமலதா, சசிகலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இருபாலை, மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

### சுப்பிரமணியம் நடேசபிள்ளை



நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடேசபிள்ளை (J.P) அவர்கள் நேற்று (24.01.2008) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - யோகம்மாவின் அன்பு மகனும் இந்திராதேவியின் பாசமிகு கண வரும், சண்முகம் (ப.நே.கூ.ச., கொடிகாமம்) அவர்களின் அன்புச் சகோதரனும் பிரியா (சேவாலங்கா மன்றம்) பிரியதேவன், குகப்பிரியா (GAQ), குகநந்தி, நர்மதன்(வீரசிங்கம் ம. வி., மீசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சரவணமுத்து -செல்லம்மாவின் மருமகனும் திருமதி பிறேமலதா, சண்முகம் (ஆசிரியர், உசன் ம.வி) ,கிருஸ்ணமூர்த்தி(பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலாதேவி, சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்),கெங்காதரன் (ப.நோ.கூ.ச., சாவகச்சேரி), பாமநாதன் (ஜேர்மனி), யோகராசா(பிரான்ஸ்) வைகுந்தன் (சுவிஸ்), லோகேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி விமலரஞ்சன் தயாநிதி ஆகியோரின் மைத்துனரும், சங்கீதன்,சஜீதா(சா.இ.க), பிரசாந் (மீ.வீ.ம) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2008) வெள்ளிக்கிழமை மாலை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக் குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு,
வரணி.
T.P 0779789868

தகவல்:
சு.சண்முகம் (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணியில் முதியோர் நேற்று சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜன.25

வரணி நாவக்காட்டுப் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்றுக்கலை 6.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச்சேர்ந்த சுப்பிரமணியம் நடேசபிள்ளை (வயது 61) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்ட வராவார்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன் றில் அறிக்கை சமர்ப்பித்த தையடுத்து நீதிவான் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை பார்வையிட்டார்.

சடலத்தை யாழ்.போதனா வைத்தி யசாலை சட்டவைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி உறவின ரிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கொலையுண்டவர் தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் தலை வராக முன்னர் பணியாற்றியதாக தெரிவிக்கப் பட்டது.

## பொருள்களை எடுத்து வருவதில் வர்த்தர்களின் கஷ்டங்களை நீக்க
### உரிய கவனம் செலுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 25

குடாநாட்டுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கப்பல் மூலம் கொண்டுவருவதில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்படும். அது சாத்தியப்படாத பட்சத்தில் மாற்று வழிகளில் இராணுவத்தினரின் விற்பனை நிலையங்கள் மூலம் நியாய விலைகளில் பொருள்களை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

இத்தகவலை நகரத்தளபதி பிரிகேடியர் ஆர்.குலதுங்கா நேற்றைய சந்திப்பின்போது தெரிவித்தார்.

மக்களுக்குத் தேவையான பாவனைப் பொருள்களை குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்துவருவதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் எனது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். கொழும்புத்துறை முகத்திலேயே அவர்கள் சிக்கல்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். அது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படும். அதனைத் தடுக்க - நிவர்த்தி செய்வதற்கு - சாத்தியப்படாத பட்சத்தில் இராணுவத்தினர் விற்பனை நிலையங்கள் மூலம் மக்களுக்கு மலிவான விலையில் பொருள்கள் கிடைக்க வழி செய்யப்படும் - அவர் தெரிவித்தார். (அ)

## கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து மட்டு. இளைஞர்கள் எண்மர் கைது

கொழும்பு, ஜன. 25

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கடவுச்சீட்டுப் பெறுவதற்காக கொழும்புக்கு ரயிலில் வந்திறங்கிய எட்டுத் தமிழ் இளைஞர்கள் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இது குறித்து பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனிடம் அவர்களின் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவிவரும் போர்ப்பீதி மற்றும் ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல், வறுமைநிலை ஆகியன காரணமாக டுபாய் நாட்டிற்குச் செல்லும் நோக்கில், கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துப் பெறுவதற்காகக் கொழும்பு வந்தவர்களே கைது செய்யப்பட்டிருக்கின்றனர் - என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## திங்கட்கிழமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் பயணம் செய்வதற்கு அனுமதி பெற்றோரின் அனுமதி முடிவடைந்திருப்பதால் அது எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் சேவையில் ஈடுபட்ட கப்பல், பராமரிப்பு வேலைகள் காரணமாக இம் மாதம் ஏழாம் திகதியிலிருந்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது. (அ)

## நல்ல முதல் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கை அரசமைப்பின் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் அரச கரும மொழி ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு இடைக்கால நடவடிக்கையாக சிபார்சு செய்த விடயங்களை இலங்கை அரசு எங்களோடு பகிர்ந்து கொண்டது.

"இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வை எட்டும்நடவடிக்கையில்இலங்கை அரசுடனும், அந்நாட்டு மக்களுடனும் இந்தியா தொடர்ந்தும் பணியாற்றும்"

- இப்படி சர்ண மேலும் குறிப்பிட்டார். (உ)

## இணைத்தலைமைகள் வர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இந்தத் திட்டம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டவுடன் அத்தீர்வை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சர்வதேச நாடுகளுக்கு அதுபற்றி விளக்கம் அளிக்க ஆரம்பித்தோம்.

புதன்கிழமை மாலை 7.30 மணியளவில் இலங்கைக்கான இந்தியத் தூதுவரைச் சந்தித்து அவருக்கு இத்திட்டம் பற்றி விளக்கினோம்.

அதனைத் தொடர்ந்து இணைத்தலைமைகளான ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்து விளக்கம் கொடுத்தோம்.

அந்நாடுகள் அனைத்தும் இத்தீர்வு யோசனையை வரவேற்றுள்ளன. இதன்மூலம் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்று அவை நம்பிக்கை தெரிவித்தன.

இன்னும் பல நாடுகள் இம்முயற்சி தொடர்பில் சாதகமாகக் கருத்து வெளியிடும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (சி)

## கெப்பிற்றிக்கொலாவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதி நீதிவான் முன்னிலையில் மேற்படி மனிதப் புதைகுழியை நேற்றுப் பிற்பகல் ஆராய்ந்தனர்.

அச் சமயம் அருகருகே காணப்பட்ட இரு மனிதப் புதைகுழிகளில் ஒன்றிலிருந்து பத்துச் சடலங்களும் மற்றையதிலிருந்து ஆறு சடலங்களும் மீட்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

கைகள் கட்டப்பட்ட நிலையில்

அனைத்தும் ஆண்களின் சடலங்கள். அவற்றின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. அனைத்துச் சடலங்களிலும் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சடலங்களை ஹொறவப்பொத்தானை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பிரேத பரிசோதனை செய்யவும், அவற்றை அடையாளம் காணவும் நடவடிக்கை எடுக்குமாறும் கெப்பிற்றிக்கொலாவ நீதிமன்ற நீதிவான் சியந்த மஞ்ச நாயக்க உத்தரவிட்டார்.

அடிக்கடி தாக்குதலுக்கு இலக்காகும் எல்லைப் புறப் பிரதேசத்தில் இவ்வாறு பதினாறு ஆண்களின் சடலங்கள் ஒன்றாக மீட்கப்பட்டமை இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

மேற்படி இரு புதைகுழிகளில் ஒன்றில் மீட்கப்பட்ட சடலங்கள் சுமார் ஒருவாரத்துக்கு முன்னரும், மற்றையதில் மீட்கப்பட்ட சடலங்கள் சுமார் இரண்டு நாள்களுக்கு முன்னரும் சுட்டுக்கொல்லப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என ஆரம்பக் கட்ட விசாரணைகளின்போது ஊகிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## வெளியிடங்களுக்கான பயண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி மற்றும் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், கடற்றொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் எனப் பலதரப்புக்களைச் சேர்ந்தவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பிரிகேடியர் குலத்துங்கவுடன் இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அங்கு விரிவாக ஆராயப்பட்டது. முக்கியமாக அத்தியாவசியப் பொருள்களின் விலை, போக்குவரத்து, மின்சாரம், பயண அனுமதி, கடற்றொழில் ஆகியன தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

### பயண அனுமதியில் தளர்வுகள்

கலந்துரையாடலின்போது பிரிகேடியர் குலத்துங்க மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதி விடயத்தில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டு அது இலகுவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பயண அனுமதி இப்போது கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவர் தான் பெறும் பயண அனுமதியை மூன்று மாதங்களுக்குள் எத்தனை தடவையும் சென்று வரப் பயன்படுத்தலாம். மூன்று மாதங்கள் முடிந்தால் அதனை யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பித்து புதுப்பிப்பதன் மூலம் மீண்டும் பயணத்தை மேற்கொள்ளலாம்.

அவசர தேவைகளின் நிமித்தம் வெளியிடங்களுக்குச் செல்வோர் உரிய ஆவணங்களுடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்து ஒரு சில மணி நேரத்துக்குள் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கற்றல் உபகரணங்களை விநியோகித்தல்

பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறான பாடசாலைகளின் அதிபர்கள் அது தொடர்பான தேவை மதிப்பீட்டை எனக்கு அனுப்பிவைத்தால் 'யுனிசெப்' அமைப்புடன் தொடர்பு கொண்டு அவற்றை வழங்க ஏற்பாடுகள் உடன் மேற்கொள்ளப்படும்.

### கடற்றொழிலாளர் விடயம்

கடற்றொழிலாளர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளே அதற்குக் காரணம். அதில் நாம் சில தளர்வுகளை மேற்கொண்டவுடன் அதனைச் சாதமாகப் பயன்படுத்தி சில கடற்றொழிலாளர்கள் எல்லை கடந்து செல்கின்றார்கள். எனவே, கிராம சேவையாளர்கள் இதனை அவர்களுக்கு நன்கு விளங்கப்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாண மக்களுக்கு சிறந்த முறையில் செயலாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இங்குஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார் யாழ். நகரத் தளபதி. (அ)

## அரசமைப்பின் 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிபார்சுகளை ஜனாதிபதியிடம் முன்வைத்திருக்கின்றது.

தெற்கில் உள்ள அனைத்துக்கட்சிகளினதும் இணக்கப்பாடு இத்தீர்வு யோசனைக்குக் கிடைத்துள்ளது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் முழு இணக்கப்பாட்டையும் இது பெற்றுள்ளது.

ஜே.வி.யினர் இந்த மாகாணசபை முறைமையை எதிர்க்கின்றபோதிலும் அவர்களும் தற்போதுள்ள அனைத்து மாகாண சபைகளிலும் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் இத்தீர்வுயோசனையை வரவேற்றுள்ளனர். தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவொரு நல்ல ஆரம்பம்.

இந்த நல்ல முயற்சியில் ஜனநாயக விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினையை அரசியல் தீர்வு மூலமும் பயங்கரவாதத்தை இராணுவ வழியிலும் தீர்ப்பேன் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். அதன்படியே செயற்பட்டும் வருகிறார்.

பிரபாகரன் கூட வன்முறை நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டு ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பினால் அவரையும் இந்தத் தீர்வு முயற்சியில் உள்வாங்க அரசு தயாராகவுள்ளது.

தற்போது முன்வைக்கபட்டிருக்கும் மாகாணசபை முறைமைத் தீர்வுயோசனை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழானது என்றாலும் கூட இப்போது பிரிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படும்என்பதுஅர்த்தமல்ல.

நீதிமன்ற உத்தரவின்படி பிரிக்கப்பட்டது பிரிக்கப்பட்டது தான். அதில் எந்த மாற்றமும் ஏற்படாது - என்றார் அவர். (சி)


## பாராட்டி வாழ்த்துகின்றேன்

எனது வழிகாட்டலின் கீழ் 2007 க.பொ.த. உயர்தரப் பிரிவில் வரலாறை ஒரு பாடமாக கல்வி கற்று விசேட சித்தி பெற்ற கீழ்வரும் மாணவர்களையும் திறமைச்சித்தி மற்றும் சித்தியடைந்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| V. துஷ்யந்தி | கொ.தீ.ம.வி. | A | V. கபிலன் | சா.இ.க. | A |
| R. ராதிகா | சா.இ.க. | A | K. மனோகரி | சா.இ.க. | A |
| S. கார்த்திகா | சா.இ.க. | A | K. அனுஷா | வ.ம.வி. | A |
| M. சிவலோஜினி | சா.இ.க. | A | V. நதியா | சா.ம.க. | A |
| N. ஜெயசக்தி | சா.இ.க. | A | R. ருபிகரன் | சா.இ.க. | A |
| N. தர்மினி | சா.இ.க. | A | K. சுதாகரன் | சா.இ.க. | A |
| Y. அனுசியா | சா.இ.க. | A | S. தனுஷா | வ.ம.வி. | A |
| V. காட்சாயினி | கொ.தீ.ம.வி. | A | T. அர்ஜன் | சா.இ.க. | A |
| N. சுரேகா | வி.ம.வி. | A | E. தேவகுமார் | சா.இ.க. | A |
| B. செந்துரு | சா.இ.க. | A | M. கந்தகோபன் | சா.இ.க. | A |
| M. அபிராமி | சா.இ.க. | A | P. சுதர்சினி | சா.இ.க. | A |
| S. முகுந்தன் | வ.ம.வி. | A | Y. அனித்தா | சா.இ.க. | A |
| I. நர்மதா | சா.இ.க. | A | S. கோபிகா | சா.இ.க. | A |
| L. நிஷாலினி | கொ.தீ.ம.வி. | A | S. விஜிதா | சா.இ.க. | A |
| K. மாலதி | வ.ம.வி. | A | S. றமணன் | உ.இ.ம.வி. | A |
| I. தனுஷன் | சா.இ.க. | A | | | |

எனது வகுப்புகள் சாவகச்சேரியில் BRIGHTEN கல்வி நிலையத்தில் மட்டுமே நடைபெறும்.

வரலாற்று ஆசிரியர் சீ. சுஜீகரன்

தரம்5-2008 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி பரீட்சை
வெற்றி இலக்கு-I
28.01.2008 இல் பாடசாலைகளில் நடைபெறும். வினாத்தாள்கள் தேவைப்படும் அதிபர், ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும்
தயா அச்சகம் 138,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா திரையரங்குச் சந்திக்கு அருகில்)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE JAFFNA
2010 A/L
பொறியியல்
ஆரம்பம்-26.01.2008
சனி, ஞாயிறு
7.30 9.00 a.m

சாயி அக்கடமி
சிவன் அம்மன் வீதி, நல்லூர்
சகல வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டன.
அளவையியல் - R.K.செல்வம்
கணக்கீடு - S.கணேஸ்
பொருளியல் - S.சத்தியதீபன்
தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.அனுமதிகள் இன்றும் பெறலாம். நேரம்- 3.30-5.30 p.m

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி. யாழ்
A/L DAY CLASS
வர்த்தக வகுப்புகள் மீண்டும் ஒரு புதிய பிரிவு
Eco - திரு.B.சுஜீபன் 7.15
Acc - திரு.P.ரஜீபன் 8.30-11.30
B.stu - திரு.ரவி
ஆரம்பம் 28.01.08
திங்கள் 7.15

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி. யாழ்
A/L DAY CLASS
கலைப் பிரிவு மீண்டும் ஒரு புதிய பிரிவு
Eco - திரு.B.சுஜீபன்-7.15
Log - திரு.கமல்-7.15
Tam - திரு.அருந்தை-8.30
H/c - திரு.N.T.தரன்-9.30
Geo - திரு.N.ராமு-7.15
Hin - திரு.N.T.தரன்-10.30
Hist - திரு.மதன்
P/sci - திரு.றொபின்சன்-9.30
Chri - திரு.ஜெயசோபன்-9.30
Drama - திரு.ராஜன்-11.30
ஆரம்பம் 28.01.08
திங்.-வெள்ளி 7.15 மணி

மானிப்பாயில்..........
100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
27.01.2008க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.